பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
Valampurii


சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 25 வெள்ளிக்கிழமை (11.09.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 266

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

## நல்லூரான் திருவடியில் இன்று தேர்

காலை 7.00 மணி



## அரசியல் அமைப்புப் பேரவை உறுப்பினர்கள் பரிந்துரை

(கொழும்பு)

இலங்கையில்அரசியல்அமைப்பு பேரவைக்கான சிவில் உறுப்பினர்கள் மூவரின் பெயர்கள் நேற்று பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெற்ற அரசியல் அமைப்பு சபையின் கூட்டத்தின் போதே இந்த பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் சர்வோதயத்தின் தலைவர் ஏ.டி.ஆரியரட்ன, ஐக்கிய நாடுகளின் முன்னாள் அதிகாரி ராதிகா குமாரசுவாமி மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சிப்லி அஸீஸ் ஆகியோரின் பெயர்களே பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இந்த பெயர்கள் எதிர்வரும் நாடாளுமனற அமர்வின்போது அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஏற்கெனவே பேரவைக்கான ஜனாதிபதியின் பிரதிநிதியாக பாட்டலி சம்பிக்க ரணவக்க, பிரதமரின் பிரதிநிதியாக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, ஜேவிபியின் உறுப்பினராக விஜித ஹேரத் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தனின் பிரதிநிதி இன்னும் நியமிக்கப்படவில்லை. (எ-11)

# இலங்கை குறித்த தீர்மானத்தில் மக்கள் நலன் உள்ளடங்க வேண்டும்

## அமெரிக்கா அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை குறித்த புதிய தீர்மானங்கள் எதுவும் பொறுப்புக் கூறுதல், குறித்த இலங்கை மக்களின் சொந்த தேவைகளை நிறைவேற்றுவதை நோக்கமாக கொண்டு அமைந்திருக்க வேண்டும் என அமெரிக்காவின் யுத்த குற்ற விவகாரங்களுக்கான முன்னாள் தூதுவர் ஸ்டீபன் ரப் தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## சம்பந்தனின் பிரதிநிதியாக சுமந்திரன் எம்.பி நியமனம்!

(கொழும்பு)

இலங்கையின் அரசியலமைப்புச் சபைக்கு தமது பிரதிநிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனை எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் நியமித்துள்ளார்.

அரசியலமைப்பின் 19-வது திருத்தச் சட்டத்துக்கு அமைய 10 பேர கொண்ட அரசியலமைப்பு சபை உருவாக் 16 ஆம் பக்கம் பார்க்க

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு ஒக்ரோபரில்

(கொழும்பு)

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த மாதம் 12 ஆம் திகதிக்கு முன்பதாக வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை வினாத்தாள் திருத்தும் நடவடிக்கைகள்முன்னெடுக்கப்பட்டுவருவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என்.புஷ்பகுமார தெரிவித்துள்ளார். 15 ஆம் பக்கம் பார்க்க

## நீதிக்கான தேடல் மற்றொரு ஆவணப்படம்

(கொழும்பு)

போர் தவிர்ப்பு வலயம் ஆவணப்படத்தின் இயக்குநர் கலம் மக்ரே சிறிலங்கா நீதிக்கான தேடல் எனும் தலைப்பில் மற்றொரு ஆவணப்படத்தை வெளியிட்டுள்ளார்.

ஆங்கிலம் மற்றும் ஸ்பெயின் மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆவ 15 ஆம் பக்கம் பார்க்க

## வெலிக்கடையில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி வெலிக்கடை சிறைச்சாலை முன்பாக பாரிய ஆர்ப்பாட்ட 15 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணை கோரி நல்லூர் நோக்கி நடைபயணம்

### கிளிநொச்சியிலிருந்து ஆரம்பமானது

(கொழும்பு)

இறுதி போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் மற்றும் போர்க் குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்பதை வலியுறுத்தி கிளிநொச்சியிலிருந்து நேற்று நடைபயணம் ஆரம்பமானது.

மனித உரிமை மீறல்களுக்கு உள்ளக பொறிமுறை பொருத்தமற்றது என்பதை சுட்டிக் காட்டியும் சர்வதேச விசாரணையைக் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தியும் வட மாகாண சபை உறுப்பினர்களான கே.சிவாஜிலிங்கம் மற்றும் அனந்தி சசிதரன் ஆகியோர் குறித்த நடைபயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று ஆரம்பமாகியுள்ள நடை பயணமானது எதிர்வரும் திங்கட்கிழமை நல்லூர் கந்தசாமி ஆலயத்தை வந்தடையும் என ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த நடை பயணத்தில் யாழ். மாவட்ட நாடாளு 16 ஆம் பக்கம் பார்க்க




## நல்லூர் ஆலய சூழலில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிப்பு


(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர்க்கந்தன் ஆலய தேர்த்திருவிழா இன்றைய தினம் நடைபெறவுள்ள நிலையில், தேர்த்திருவிழா எவ்வித தடையுமின்றி சிறப்பாக நடைபெறுவதற்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டுமென யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யூ.வூட்லர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சுமார் 650 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேர்த்திருவிழாவின் போது பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் அவா குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் 19 ஆம் திகதி முதல் ஆரம்பமான நல்லூர்க் கந்தனின் உற்ச 15 ஆம் பக்கம் பார்க்க





அலைகடலெனத் திரண்ட மக்கள் கூட்டத்தின் மத்தியில் செல்லும் நல்லைக் கந்தனின் சப்பறத்தை படங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதில் பிரதம நீதியரசர் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

உயர் நீதிமன்ற நீதிபதி திருமதி சந்திரா ஏக நாயக்க பதில் பிரதம நீதியரசராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. அபேகோன் பிரசன்னமாயிருந்தார். (ஏ)

# நாடாளுமன்ற நேரடி ஒளிபரப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற அமர்வுகளை நேரடியாக ஒளிபரப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் அடுத்த வருடம் தொடங்கப்படவுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவான உறுப்பினர்களுக்கான செயலமர்வின்போது இந்தத் தகவலை பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் ஒவ்வொரு நாடாளுமன்ற அமர்வின் போதும் தங்களது பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர் சபைக்குச் சமுகமளித்திருக்கின்றாரா? விவாதங்களில் பங்கேற்கின்றாரா? என்பதை அவரது தொகுதி மக்கள் அறிந்து கொள்ள முடியும்.

அத்துடன் அமைச்சர்களிடம் முன்வைக்கப்படும் கேள்விகளுக்கு அவர்கள் அளிக்கும் பதில் குறித்தும் பொதுமக்கள் இதன் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (எ-11)

**வேப்பம் விதை தேவை**

தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ் (C-2102)

மூத்த நயினார் கோயிலடி
ஆனைக்கோட்டை
T.P 021 2255718

**ஏல விற்பனை**

41 வருடம் பாவித்த ஆசிரிய மேசைகள் நான்கு ஏல விற்பனைக்கு விடப்பட உள்ளது. (C-2105)

இடம் :- நீர்வேலி சி.சி.த.க பாடசாலை
திகதி :- 25-09-2015 காலை 10 மணி

அதிபர்
நீர்வேலி சி.சி.த.க பாடசாலை

# சர்வதேச விசாரணையை வலியுறுத்தி மன்னாரில் நேற்று கையெழுத்துப் பதிவு







(மன்னார்)

இலங்கையில் இடம் பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச பொறிமுறையின் கீழ் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி நேற்று மன்னாரில் கையெழுத்து வேட்டை இடம் பெற்றது.

மன்னார் பிரஜைகள் குழு மற்றும் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையும் தமிழர் செயற்பாட்டுக்குழுவும் இணைந்து குறித்த கையெழுத்து வேட்டையினை ஆரம்பித்து வைத்தன.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை அடிகளாரின் தலைமையில் இடம் பெற்ற குறித்த கையெழுத்து வேட்டையில் தமிழ் தேசிய முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார பொன்னம்பலம், வடமாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன்,வடமாகாண சபை உறுப்பினர் வைத்தியகலாநிதி ஜீ.குணசீலன், மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தலைவர மாட்டீன் டயேஸ்,முன்னாள் உப தலைவர் அந்தோனி மார்க்.மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பீ.ஏ.அந்தோனி மார்க், எழுத்தாளர் வி.எஸ். சிவகரன், வடமாகாண காணாமல் ஆக்கப்பட்டவர்களது குடும்பங்களின் சங்கப் பிரதிநிதிகள என பலர் கலந்து கொண்டனர். (எ-11)

# தேசிய அரசுடன் செயற்பட மறுக்கும் சிறிபால கம்லத்



(கொழும்பு)

மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் இணைந்து கடமையாற்றத் தாம் தயாரில்லை என நாடாளு மன்ற உறுப்பினர் சிறிபால கம்லத் தெரிவித்துள்ளார்.

வரப்பிரசாதங்களை எதிர்பார்த்து நான் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை.

இன்னும் சில மாதங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. அந்தத் தேர்தலுக்கு நாம் ஆயத்தமாக வேண்டும் என்றார்.

நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகொள்ள ஐக்கிய தேசியக் கட்சி கடந்த ஜனவரி மாதம் முதல் ஆயத்தமானது. எனினும் எம்மால் அவ்வாறு ஆயத்தமாக முடியவில்லை.

எமது வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் விருப்பு வாக்குகளை முதனிலைப்படுத்தி செயற்பட்டனர். கட்சியை வெற்றியீட்டச் செய்ய முயற்சிக்கவில்லை.

இழைக்கப்பட்ட இத்தவறுகளை திருத்திக்கொண்டு, எம்மிடமிருந்து விலகிய மக்களை ஒன்றிணைத்து திட்டமொன்றை நாம் முன்னெடுக்க வேண்டுமென சிறிபால கம்லத் வெலிகந்த பிரதேசத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சுப் பதவி சிறிபால கம்லத்துக்கு வழங்கப்படவிருந்தது. நேற்று முந்தினம் நடைபெற்ற பதவிப் பிரமாண நிகழ்வுகளில் கம்லத் பங்கேற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# விபத்தில் சிக்கி நால்வர் பலி

(கொழும்பு)

மினுவாங்கொடை, யகோடமுல்ல எனும இடத்தில் இடம்பெற்ற விபத்தில், ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் அதிகாரிகள் நால்வர் உயிரிழந்துள்ளதாகவும் சிலர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.இந்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

மினுவாங்கொடை-கொழும்பு பிரதான வீதியில், டிபென்டர் ரக வாகனம் ஒன்றும் இரண்டு தனியார் பஸ்களும் மோதிக்கொண்டதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்தவர்கள் மினுவாங்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கம்பஹா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த டிபென்டர் ரக வாகனம் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவுக்கு சொந்தமானது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

# மும்மொழி கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான மும்மொழிக் கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி கற்கை நெறியை பயில விரும்பும் மாணவர்கள் யாழ்ப்பாணம், கல்வியங்காட்டில் அமைந்துள்ள மும்மொழி கற்கை நிலையத்தில் இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வகுப்புக்கள் வார நாட்களில் காலை 8.30 மணிமுதல் 12.30 மணிவரை நடைபெறும். (எ-12)

# மரண அறிவித்தல்

## திருமதி பரமேஸ்வரி குருநாதன்



உரும்பிராயை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி பரமேஸ்வரி குருநாதன்**

09/09/2015 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான சபாரத்தினம்-பூரணம் தம்பதிகளின் அன்பு மகளும் காலம் சென்றவர்களான V.M வேலாயுதபிள்ளை-சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் சுரேந்திரன்(பிரான்ஸ்), தேவானந்(பிரான்ஸ்), பிரேம்நாத் (கனடா), நிர்மலநாதன் (பிரான்ஸ்), ஸ்ரீரங்கநாதன் (அரவிந் ஸ்ரூடியோ யாழ்), நவலோகநாதன்(பிரான்ஸ்) காலம்சென்ற ராஜி, நரேந்திரன் (கனடா), லோகநாயகி(விஜி-கனடா) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-09-2015 திங்கட்கிழமை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

309,நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்.
(021-222 2190
001-416-7544401)

(C-2107)

தகவல்
கு.ஸ்ரீரங்கநாதன் (மகன்)
(அரவிந் ஸ்ரூடியோ யாழ்)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



தேசிய அரசாங்கத்தின் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக கௌரவ திருமதி **விஜயகலா மகேஸ்வரன்** அவர்கள் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைவதோடு தங்கள் பணி மேன்மேலும் சிறக்க வட்டுக்கோட்டை தொகுதி மக்கள் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-2108)

காரைநகர் வீதி,
சித்தன்கேணி சந்தி,
சித்தன்கேணி.

வட்டுக்கோட்டை தொகுதி
ஐக்கிய தேசிய கட்சி காரியாலயம்
வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவின் அனுசரணையுடன்

# இலங்கைக்கான ஆதரவை ஜெனிவாவில் பெற முடியும்

## நீதியமைச்சர் விஜயதாஸ நம்பிக்கை

(கொழும்பு)

அமெரிக்க அரசாங்கத்தின் அனுசரணையுடன் ஜெனிவாவில் இலங்கைக்கான ஆதரவை பெற்றுக் கொள்ள முடியும் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலின் தன்மைகளை கொண்டு இலங்கை மீது சர்வதேச நாடுகள் நம்பிக்கையை கொண்டுள்ளதாக; அவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் ஜெனிவா அமர்வின் போது தாம் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவுடன் இணைந்து கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

போர்க்குற்றம் தொடர்பில் உள்நாட்டு விசாரணைக்கான கோரிக்கையை இலங்கை முன்வைக்கவுள்ளது.

இதன் அனுசரணையாளராக அமெரிக்க அரசாங்கம் இருக்கும் என்றும் நீதியமைச்சர் விஜயதாஸ மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஷசீந்திர ராஜபக்ஷவும் ஆஜர்

(கொழும்பு)

ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷவும் நேற்று பாரிய மோசடிகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன் ஆஜராகியிருந்தார்.

தனக்கு எதிரான முறைப்பாடு ஒன்று தொடர்பில் வாக்குமூலம் அளிக்கவென அவர் ஜனாதிபதி ஆணைக்குழு முன் ஆஜரானார்.

மஹியங்கனை பிரதேச அரச காணியில் நிர்மாணம் மேற்கொள்ளல் மற்றும் காணி விடயத்தில் முறையான விதி முறைகளைகடைப்பிடிக்காமை தொடர்பில் ஷசீந்திரவிடம் விசாரணை முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற மோசடிகள் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துவரும் இந்த ஆணைக்குழுவினால் இதுவரை முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ, உள்ளிட்ட பலர் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## குளியாப்பிட்டியவில் கைக்குண்டுகள் மீட்பு

குருநாகலை குளியாப்பிட்டி, நாரம்பல்லே பகுதியிலுள்ள கால்வாயொன்றிலிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு, மூன்று கைக்குண்டுகளை குளியாப்பிட்டிய பொலிஸார் மீட்டுள்ளனர். பொது மக்கள் வழங்கிய தகவலைத் தொடர்ந்தே இக்கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றை செயலிழக்கச் செய்வதற்காக குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் வரவழைக்கப்பட்டுள்ளதாகவும் இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் குளியாப்பிட்டிய பொலிஸார் மேலும தெரிவித்தனர். (இ-7)




## அமைச்சு பதவி குறித்து சந்திரிகாவுக்கு கவலை

மக்கள் ஆணை வழங்கப்படாத சிலருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டிருப்பது கவலையளிப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள தேசிய அரசாங்கத்திற்குள் இந்த பதவிகள் வழங்கப்பட்டிருப்பதால் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலை ஏற்பட்டிருப்பதாகவும் சந்திரிகா குமாரதுங்க தனது உத்தியோகபூர்வ முகநூலில் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி மீது தாக்குதல் 6 பேர் கைது

ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி ஒருவர் மீது தாக்குதல் நடத்திய ஆறு பேரை பொலிஸார் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்துள்ளனர். கொள்ளுப்பிட்டியவில் அமைந்துள்ள இரவு விடுதியொன்றிலேயே இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

தாக்குதலுக்குள்ளான அதிகாரி, கடுங்காயங்களுக்குள்ளான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் இவ்வாறு தாக்குதல் நடத்தியவர்கள் குறித்த இரவு விடுதியில் பணியாற்றுபவர்கள் என்றும் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (இ-7)

## இரு அணிகலன்கள் வைத்தியசாலையில்

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் (எலும்பு முறிவு கிளினிக்கில்) கண்டெடுக்கப்பட்ட அணிகலன்கள் வைத்தியசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் காரியாலயத்தின் காசாளரிடம் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சிறிபவானந்தராஜா அறிவித்துள்ளார். (இ-5)

## எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தன் இனவாதம் பேசுவதே இல்லை

### மல்வத்து பீடாதிபதி பாராட்டு

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் இனவாதம் பேசுவதேயில்லை என கண்டி மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே சிறி சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோ கணேசன், அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டதன் பின்னர் கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரி பீடாதிபதிகளை நேற்று முன்தினம் சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

இதன் போது மல்வத்து பீடாதிபதி, சம்பந்தன் இனவாத கருத்துக்களை வெளியிடுவதில்லை என கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் சம்பந்தனின் பேச்சில் இனவாத கருத்துக்கள் வெளிப்பட்டன. எனினும் தற்போது அவ்வாறான ஓர் நிலைமை இல்லை என்றே தெரிகின்றது. அரசியலவாதிகளே இனவாதத்தை தூண்டுகின்றனர். தங்களது தேவைக்காக அவ்வாறு செய்கின்றார்கள்என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## புதிய பதில் பிரதம நீதியரசராக சந்திரா ஏக்கநாயக்க நியமனம்



புதிய பதில்பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதிபதி சந்திரா ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று அவர் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. அபயகோனும் இந்த சந்தர்ப்பத்தில் பிரசன்னமாகியிருந்தார்.

பிரதம நீதியரசர் கே.சிறிபவன் வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்ட காரணத்தினால் இவ்வாறு பதில் பிரதம நீதியரசராக சந்திரா ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதியினால் கொண்டு வரப்பட்ட 18 வது சீர்திருத்தத்தில் இவர் முக்கிய பங்கு வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தாஜுடின் கொலை சாட்சியாளருக்கு உயிர் அச்சுறுத்தல்

ரகர் விளையாட்டு வீரர் வசிம தாஜுடின் வழக்கின் முக்கிய சாட்சியாளர் ஒருவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தாஜுடின் கொலை தொடர்பில் முக்கிய சாட்சியாளர் ஒருவரை சிலர் அச்சுறுத்தியுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். தாஜுடின் மரணம குறித்த வழக்கு விசாரணைகளின் போது புலனாய்வுப் பிரிவினர் இதனைக் குறிப்பிட்டுள் ளனர். அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தி [illegible] விட்டுள்ளது. (இ-7)

## இலங்கையில் தமிழருக்கெதிரான துன்புறுத்தல்கள் தொடர்கின்றன

இலங்கையில் கடந்த ஜனவரி 8 ஆம் திகதி புதிய அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ள நிலையிலும், தமிழர்களுக்கு எதிரான துன்புறுத்தல்களும், சித்திரவதைகளும் தொடர்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டதன் பின்னரான காலப்பகுதியில் இதுவரையில் தமிழர்களுக்கு எதிராக இராணுவத்தினரால் செய்யப்பட்ட 11 சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குறித்த சம்பவங்கள் வாக்குமூலத்தின் ஊடாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக IBJP என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் தற்போது வெளிநாடுகளுக்கு சென்று, அங்குள்ள சட்ட வைத்தியர்களிடமும், சர்வதேச வைத்திய நிபுணர்களிடமும் சிகிச்சைகளையும், ஆலோசனைகளையும் பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தொடர்பான புகைப்படங்கள் தற்பொழுது வெளியாகியுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. (இ-7)

## வங்கியில் கொள்ளை; நால்வர் தப்பியோட்டம்

முகத்தை முழுமையாக மூடிய தலைக்கவசங்களை அணிந்தவாறு இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையர்கள் நால்வர், நேற்று ஹங் வெல்லயில் உள்ள அரச வங்கி யொன்றில் 15 இலட்சம் ரூபாவை கொள்ளையடித்து விட்டு தப்பிச்சென்றுவிட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காவற்காரர் மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு, அந்த மோட்டார் சைக்கிள்கள் ஒன்றில் தப்பிச் சென்றுவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்ரியானோ ரொனால்டோவின் விலை எவ்வளவு தெரியுமா?




போர்த்துக்கல் கால்பந்து அணியின் நட்சத்திர வீரரான கிறிஸ்ரியானோ ரொனால்டோ ஸ்பெயின் கால்பந்து கழக அணியான ரியல் மாட்ரிட்டுக்காக விளையாடி வருகிறார்.

இந்நிலையில் அவர் தற்போது பிரான்ஸ் நாட்டின் முன்னணி கால்பந்து கழக அணியான பாரிஸ் செயின்ட்-ஜெர்மைன் அணிக்கு மாறப் போவதாக தகவல் பரவியது.

இது தொடர்பாக ரியல் மாட்ரிட் அணியின் தலைவர் பெரேஸ் ஸ்பெயினின் உள்ள ஒரு வானொளிக்கு அளித்த பேட்டியில்,

"நாங்கள் ரொனால்டோவை 2016ல் விற்பனை செய்ய விரும்பவில்லை. அவருடைய ஒப்பந்தம் இன்னும் மூன்று ஆண்டுகள் இருக்கிறது.

ரொனால்டோவை வேறு அணிகள் ஒப்பந்தம் செய்ய ஒரு பில்லியன் யூரோ செலுத்த வேண்டும்.

பாரிஸ் செயின்ட் - ஜெர்மைன் அணியின் உரிமையாளரான கட்டார் ஸ்போர்ட்ஸ் இன்வெஸ்ட் மெனட்டால் கிறிஸ்டியானோ ரொனால்டோவை வாங்க முடியாது.

அப்படி அவரை வாங்க நினைத்தால், அவர்கள் டிரான்ஸ்பர் சட்டதுக்கு உட்பட்டு ஒரு பில்லியன் யூரோ (சுமார் 7445 கோடி ரூபாய், 1.12 பில்லியன் டொலர்) செலுத்த வேண்டும்" என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2013ஆம் ஆண்டு ரியல் மாட்டிரிட் அணி, வேல்ஸ் நாட்டின் சர்வதேச வீரர் கரேத் பாலேவை 132 மில்லியன் டொலருக்கு ஒப்பந்தம் செய்ததே டிரான்ஸ்பர் சாதனையாக உள்ளது. (க)

# ஜப்பான் ஓபன் பட்மிண்டன்
# 2-வது சுற்றில் சாய்னா தோல்வி




ஜப்பான் ஓபன் பட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால் 2ஆம் சுற்றிலேயே தோல்வியடைந்து வெளியேறினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற 2ஆம் சுற்று ஆட்டத்தில், நம்பர்-1 வீராங்கனையான சாய்னா நேவால், ஜப்பான் வீராங்கனை மினாட்சு மிதானியுடன் விளையாடினார்.

போட்டியின் தொடக்கத்தில் சாய்னாவின் கை ஓங்கியிருந்தது. முதல் செட்டில் 3-1 என முன்னிலை பெற்றிருந்தார்.

அதன்பின்னர் ஆட்டம் மிதானி வசம சென்றது. கடுமையாகப் போராடி 7-7 என சமன் செய்த மிதானி, தொடர்ந்து சாய்னாவுக்கு அதிர்ச்சி அளித்து அந்த செட்டை 21-13 என கைப்பற்றினார்.

அடுத்த செட்டிலும் சாய்னாவுக்கு கடும் சவால் அளித்த மிதானி, அந்த செட்டை 21-16 என வசமாக்கி வெற்றி பெற்றார்.

சாய்னா நேவால் 2ஆம் சுற்றுடன் வெளியேறியது இந்தியாவின் சம்பியன் வாய்ப்புக்கு ஏற்பட்ட பின்னடைவாகும். (க)

# சூதாட்டத்தில் பாக் வீரர்கள் – மியன்டாட்


பாகிஸ்தான் வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதால்தான் பயிற்சியாளர் பணியில் இருந்துதான் விலகியதாக முன்னாள் பாகிஸ்தான் தலைவர் ஜாவித் மியான்டாட் தெரிவித்துள்ளார்.

1976 முதல் 1993ஆம் ஆண்டு வரை பாகிஸ்தான் அணியில் இருந்த மியான்டாட் டெஸ்ட் போட்டிகளில் பாகிஸ்தான் வீரர்களில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்.

இந்நிலையில் ஓய்வுக்கு பிறகு பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளராக இருந்த மியான்டாட், அந்த பணியில் இருந்து திடீரென்று விலகியது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் கூறுகையில், "நான் பயிற்சியாளராக இருந்த போது சில வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க அப்போதைய பாகிஸ்தான், கிரிக்கெட் சபைத் தலைவர் கீாலித் மெகமூத்திடம் வலியுறுத்தினேன்.

1999ல் சூதாட்ட அச்சுறுத்தல் பாகிஸ்தான் கிரிக்கெட்டை பலவீனமாக்கியது. தொடர்ந்து பயிற்சியாளராக இருக்க மனசாட்சி இடம் கொடுக்காததால் 1999ஆம் ஆண்டு அந்த பதவியில் இருந்து விலகினேன்" என்று கூறியுள்ளார். (க)



# அப்ரிடியுடன் உறவு; மொடல் அழகி பரபரப்பு






பாகிஸ்தான் அணி வீரர் அப்ரிடியுடன் பாலியல் உறவு வைத்துக் கொண்டதாக மொடல் அழகி அர்ஷி கான் தெரிவித்துள்ளார்.

நடிகையும் மொடலுமான அர்ஷி கான் சர்ச்சைக்குரிய பெண் சாமியாரான ராதேமா பெண்களை வைத்து விபசாரம் நடத்துவதாகவும், அவரின் ஆட்கள் தன்னையும் அந்த தொழிலுக்கு அழைத்ததாகவும் பரபரப்பு புகார் தெரிவித்தார்.

இந்நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரரான சஹிட் அப்ரிடியுடன் பாலியல் உறவு வைத்துக் கொண்டதாக அவர் தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து டுவிட்டரில்,

அப்ரிடியுடனான உறவு குறித்து முன்பு கேட்டதற்கு அர்ஷி கூறுகையில், நாங்கள் எல்லாம் நல்ல நண்பர்கள். சில தடவை சந்தித்துள்ளோம். அவ்வளவுதான். அதற்கு மேல் ஒன்றுமே இல்லை என்று தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. (க)




அவுஸ்திரேலிய – இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 4ஆவது ஒரு நாள் போட்டி இன்று ஆரம்பமாகும் நிலையில் அதற்கான பயிற்சியில் அவுஸ்திரேலிய வீரர்கள் ஈடுபட்டபோது... (க)

# தோனியா...? ஹோலியா...?
# அணித் தேர்வில் புது குழப்பம்




ஒருநாள் தொடருக்கான இந்திய அணிக்கு தோனிக்குப் பதில் ஹோலியை தலைவராக்க திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

இந்தியா வரும் தென்னாபிரிக்க அணி 3 இருபது-20, 5 ஒருநாள் மற்றும் 4 டெஸ்ட போட்டிகள் என, 72 நாட்கள் கொண்டமைந்த தொடரில் பங்கேற்கிறது.

முதலில இருபது-20 போட்டிகள வரும் அக்., 2ல் தரம்சாலா, 5இல் கட்டாக், 8ல் கொல்கத்தாவில் நடக்கின்றன. அதன்பின் ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர் என போட்டிகள் நடக்கும்.

தற்போதைய நிலையில் கடந்த ஆண்டு டெஸ்ட் அரங்கில் இருந்து விடைபெற்ற தோனி, இருபது-20, ஒருநாள் அணிக்கு தலைமைப் பதவியைத் தொடர்கிறார்.

டெஸ்ட் அணியின் தலைவராக தேர்வு செய்யப்பட்ட ஹோலி, வித்தியாசமான திட்டங்களுடன் இலங்கை மண்ணில் தொடரை வென்று அசத்தினார்.

இதையடுத்து இருபது-20, ஒருநாள் அணிக்கும் ஹோலியையே தலைவராக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

இதனால், தென்னாபிரிக்க தொடரில் ஒருநாள் போட்டி அணிக்கு, தோனியை நீக்கிவிட்டு ஹோலியை தலைவராகக் கொண்டு வரலாமா என இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) தேர்வாளர்கள் யோசித்து வருகின்றனர்.

ஹோலி, ரகானே, அஷ்வின், ரோகித் சர்மா, ஷிகர் தவான் உள்ளிட்டோர் மூன்று வித அணியிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இதில் டெஸ்ட் அணிக்கு தலைவராக இருக்கும் ஹோலி திடீரென தோனி அணியில் விளையாடும் போது சற்று வித்தியாசமான உணர்வைத் தரலாம்.

இதுகுறித்து கடந்த தேர்வாளர்கள் கூட்டத்திலேயே விவாதிக்கப்பட்டது. அதேநேரம் தோனியை பொறுத்தவரையில் இந்திய அணி தலைவர்களில் மிகவும் வெற்றிகரமானவராக உள்ளார். ஹோலி இப்போதுதான் தலைமைப் பதவியில் அடி எடுத்து வைக்கிறார்.


கடந்த 8 ஆண்டுகளாக தொடர்ந்து தலைவராக இருந்த போதும், தோனியின் துடுப்பாட்டம் திறன் சிறப்பாகத்தான் இருந்தது: இருப்பினும், கிரிக்கெட் வீரர்களைப் பொறுத்தவரையில் எல்லோரும் அணிக்கு வருவதும் போவதுமாகத் தான் இருப்பர். இது தலைவராக இருப்பவருக்கும் பொருந்தும்.

தோனி, தனது கிரிக்கெட் வாழ்கையின் கடைசிக் கட்டத்தில் தற்போது உள்ளார். டெஸ்டில் இருந்து விலகிய இவர், 2016 உலக கிண்ணத் தொடருக்குப் பின், தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்பாரா என உறுதியாகத் தெரியவில்லை.

இதனால் சொந்த மண்ணில் நடக்கவுள்ள தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஒருநாள் தொடருக்கு, ஹோலியை தலைவராக்க இது தான் சரியான தருணமாக பார்க்கப் படுகிறது.

ஒருவேளை இந்த மாற்றம் நிகழ்ந்தாலும், 2016 உலக கிண்ண இருபது - 20 போட்டிகள் வரை இருபது - 20 அணியின் தலைமை பதவி விடயத்தில் தோனிக்கு எவ்வித சிக்கலும் இருக்காது என்று கூறப்படுகிறது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா


சிறப்புமலர்- 11.09.2015



**அகக் கண் மலர்ந்தருள்வாய் ஐயனே!**

அழகு வேலவனே!
அடியார் குறை தீர்ப்பவனே!
அன்பின் நாயகனே!
அடைக்கலம் அளிப்பவனே!
அவனியெல்லாம் நிறைந்திருப்பவனே!
அகக் கண் மலர்ந்தருள்வாய் ஐயனே!






நல்லைப் பதியில் குடி கொண்ட வடிவேலா
அடியவர்க்கு நல்லருள் செய்திட
ஆறுமுகமானவனே தேரேறி வந்திடுவாய்



NDB வங்கி

பக்தர் புடை சூழ இரதத்திலே பவனி வரும் நல்லூர் குமரனுக்கு அரோகரா!

V.S.P லஞ் ஒயில்

தயாரிப்பாளரும்
ஏக விநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்

இல.26A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :
021 222 4135,
021 222 9165

இருளை நீக்கிட வருவாயப்பா...
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்

அசோகா நகை அகம்
ASOKA JEWELERS

...கை நாணயம்
உத்தரவாதம்
22 கரட் தங்க
நகைகளுக்கு

இல:111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021 222 6290




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர் - 11.09.2015




Regd No. DS/ 589, Kiruba Learners, Govt. Approved

A Grade Driving Training School

L அரச அங்கீகாரம் பெற்ற

A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- அரச, தனியார் ஊழியர்கள் சனி, ஞாயிறு உட்பட தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.
- எமது கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சிகள் நடைபெறும்.
- மும்மொழிகளிலும் ஆண், பெண் இருபாலாருக்கும் பயிற்சிகள் வழங்கப்படும்.
- தவணை முறையில் கட்டணம் செலுத்த முடியும்.





## கிருபா லேணர்ஸ்

இல, 226. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்,
தொ,பேசி, 021 222 4353. 021 492 3200. 077 722 5292

விசுவமடு
021 320 1515
071 454 6955

பருத்தித்துறை,
021 492 3201
071 454 6958

கிளிநொச்சி
021 228 5505
071 454 6955

சாவகச்சேரி
021 492 3202
021 2270700

நெல்லியடி
021 300 6550
071 454 6957

சுன்னாகம்
021 224 2022
071 454 6956

இல. 216,
A9வீதி, வவுனியா.
(வசந்தி தியட்டருக்கு முன்பாக)



இருளை நீக்கிட வருவாயப்பா!





## ஜீவாகாரம்

குழந்தைகள் முதல்
முதியோர்வரை பாவிக்க
உகந்த சத்துணவு




## Anna Coffee

100% Pure Ground Coffee




Superbly Blended & Roasted to a Strict Formula....

எமது புதிய தயாரிப்புக்கள்....




அண்ணா தொழிலகம் - இணுவில்.
TEL: 021 - 2241565,
021 7200800, 0112 - 436063



## தவாஸ் அன்ட் சன்ஸ்
## தச்சுத் தொழிற்சாலை

## Thavas And Sons
(Carpentry Work Shop)



கதவு, யன்னல், நிலைகள், கூரை
வேலைகள், மரச்சிற்ப வேலைகள்
பன்றி கபேட் (Pantry Cupboard)
வேலைகள் மற்றும் வீட்டு வர்ண
வேலைகள் (House Painting)
நவீன முறையில் செய்து
கொடுக்கப்படும்

உரிமையாளர் :
தவராசா காண்டீபன்
T.PHONE NO :
0771387651
0766201231

பாரதிலேன்,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா
சிறப்புமலர்- 11.09.2015

தேரேறி வரும் நல்லைக் கந்தனுக்கு அரோகரா

# பொபி பத்திகள்



பக்தனுக்கும் பகவானுக்கும்
பாதமாய் அமைவது பொபி பத்திகள்



70/=

பொபி B -20 பத்திகள்
1 பெக்கட்டில் 3 வாசனை



100/=

பொபி ரோஜா மணத்தில்
100 பத்திகள்




50/=

பொபி மல்லிகை மணத்தில்
50 பத்திகள்




20/=

பொபி பிலெட்டினம் பத்திகள்




30/=

பொபி குரு பத்திகள்

**BOBBY OVER SEAS**
177, Balagolla Kengalla.
Tel : 081 3836647

37 வருட தேசிய அபிவிருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர் - 11.09.2015



புள்ளி மயிலோனே
முருகா சரணம்!

## கோபுரம் சவுண்ட்ஸ்

இல.38, மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

ஒலிபெருக்கி சாதனங்களும் அதற்குரிய உதிரிப் பாகங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.




# CAMBRIDGE ENGLISH

## PET

UNIVERSITY OF CAMBRIDGE

August மாதத்தில் A/L பரீட்சைக்குத் தோற்றி மருத்துவ பொறியியல், விவசாய, விஞ்ஞானமுகாமைத்துவம் போன்ற பாட நெறிகளை பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழி மூலம் கற்க இருக்கும் மாணவர்கள் தங்கள் ஆங்கில அறிவைக் கூட்டிக் கொள்ளவும், பல்கலைக்கழகங்களில் எந்தவித சிரமுமின்றி விவுரைகளைக் கேட்கவும், ஒப்படைகளை எழுதவும் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள அரிய சந்தர்ப்பம்.

உடனடியாக : BRITISH Council இன் ஆதரவுடன் 14.09.2015 இல் ஆரம்பிக்கவிருக்கும்
Cambridge - Prelimnary English Test (PET) வகுப்பில் சேருங்கள்.

* Around 4 million people a year take cambridge English exam
* 13000 universities and employers globally recognise our certificates
* We have an international network of 2,700 authorised exam centres in 130 countries
* 40,000 schools and intitutions prepare students for cambridge English exam
* We have 100 years of experience and expertise in English language assessment
* நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானல், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாட நெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்

## FCE

Cambridge First Certificate in English

FCE is an upper intermediate level exam. It tests the ability to deal confidently with a range of written and spoken . communication.FCE is the most widely taken of the general English exam. with over 250,000 candidates every year. This exam is at CEFR Level C1.

Course Schedule

| | Mon,Tuse,Wed,Thur | Saturday&Sunday |
|---|---|---|
| Duaration | 10Week | 10Week |
| Time | 8.30-10.30; 10.30-12.30 | 2.00-5.00 |
| Exam fee | Rs.8300 | |
| Exam date | 07-12-2013-Colombo | |

புதிய பிரிவுகள்
14-09-2015
இல் ஆரம்பமாகும்.

## BRITISH COLLEGE OF ENGLISH

No. 192, Navalar Road, Jaffna.
(பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 . 077 880 3887



## NSB

'உங்களினதும் நாட்டினதும் முன்னேற்றத்தின் முன்னோடி'



தேசிய சேமிப்பு வங்கியின் உன்னத சேவை மூலம் தங்கள் உடனடி பணத்தேவையை பூர்த்தி செய்திட முடியும். குறைந்த வட்டியுடன் கூடிய கடன்தொகையை துரிதகதியில் பெற்றிடலாம்.

உங்கள் வைப்புக்களுக்கு 100% அரச உத்தரவாதம் வழங்கும் ஒரே வங்கியின் வாடிக்கையாளராக வாழ்க்கை முழுவதற்குமான . வரப்பிரசாதங்களை மகிழ்ச்சியுடன் அனுபவியுங்கள்.

உங்கள் முன்னேற்றத்திற்காக தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து சலுகை வட்டி விகிதத்தில் பல்வேறு கடன் திட்டங்கள்.

- 'ரன்சஹன' கடன் - தங்க ஆபரண அடகு சேவை.
- சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான கடன்.
- வீடமைப்புக் கடன்
- 'புத்தி' (Buddhi) உயர் கல்விக் கடன்
- 'ஓட்டோ லோன்' (Auto Loan) வாகன கடன்
- தனியார் கடன்
- ஓய்வூதிய கடன்
- வைப்புக்கள் மீதான கடன்

தேசிய சேமிப்பு வங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர்- 11.09.2015

யாழ் நகர் மத்தியில் நவீன வசதிகளுடன் கூடிய

## அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்



- முற்றிலும் குளிரூட்டப்பட்ட மண்டபம்.
- 700 பேர் இருக்கைகளில் அமர்ந் திருந்து திருமணத்தைப் பார்க்கும்வசதி.
- கீழ் மண்டபத்தில் 350 பேர் அமர்ந்திருந்து நிகழ்வினை பார்க்கக் கூடியவசதி.
- ஒரே நேத்தில் 200 பேர் உணவருந்தும் வசதி.
- Lift வசதி. விசாலமான வாகனத் தரிப்பிட வசதி.
- அனைவரும் திருமணத்தைப் பார்க்கும் தொலைக்காட்சி வசதி.
- உணவுகளை தாங்களே பரிமாறிக் கொள்ளும்வசதி.
- மற்றும் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ற முறையில் அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

இல.542, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. : 021 373 4116,
021 222 1355, 021 222 1356

மின்னஞ்சல் : asrhall@hotmail.com
Find us on : Facebook.com / Jaffnaasrenterprises.

## A RAHUMAN HOTEL


123, இராமநாதன் வீதி, கலட்டிச் சந்தி.

**T.P : 077 274 9743**

விசேட
வைபவங்களுக்கான
ஓடர்களும் ஏற்றுக்
கொள்ளப்படும்



பக்தர் புடை சூழ இரதத்திலே பவனி வரும் முருகா!



## E.S.P. நாகரத்தினம் சக நிறுவனம்

E.S.P Nagaratnam & Co

52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


**தொ.பே: 021 222 3096, 021 221 7277**

அமெரிக்கன் குடிநீருக்கான யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்



மொத்தமாகவும்
சில்லறையாகவும்
உடனுக்குடன் பெற்றுக்
கொள்ள முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர் - 11.09.2015




அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

நியூ நெல்சன் லேணர்ஸ்

New Nelson Learners

- சாரதி பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து மிக விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புகள்.
- அதிகூடிய பயிற்சி நேரங்கள். அதிகூடிய பயிற்சிக் காலங்கள். தவணைமுறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
- நவீன வாகனங்களில் வாகனப் பயிற்சிகள்.

கிளைகள்

இல.97 A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 226 1393, 077 111 3382

இல.89, கண்டி வீதி சுண்டுக்குளி யாழ்ப்பாணம். 021 222 4527 077 358 1916

பஸ் நிலையம், சுன்னாகம் 077 715 0097 021 492 3732

காளிகோயில் வீதி, சாவகச்சேரி 021 492 3114 077 761 1686

பிரதான வீதி, வல்வெட்டித்துறை, 077 557 3711 021 492 3733



menus flyers magazines invitation cards brochures posters letter heads business cards Lables Leaflets Stickers event tickets digital name boards books & boxes packaging calendars tags certificates t shirt profiles banners

PRINTING

We Print Miracles

Our excellent customer service and high quality printing make us the most reliable printing partner for all the projects you need done "right now".

உங்கள் தேவைகளை
எமது தேர்ச்சி மிக்க வடிவமைப்பாளர்களால்
உங்களுக்கென்று தனித்துவமாக வடிவமைத்து
எமது உயர்தர பிறிண்டிங் சேவையினை
பெற்றுக் கொள்ளுங்கள்.

Let's go!!

ideaS PRINTERS

All kind of Offset Printing & Digital Printing

No. 7/3, Ratnam Avenue, K.K.S Road, Jaffna. : 021 221 2505 / 077 636 6860 : ideaslanka@gmail.com



சைவமும் தமிழும் தழைக்க தேரேறும் நல்லூரான் அடிபணிவோம்

எரிக்கணேஷ்

மூக்குக் கண்ணாடியகம்

நவீன ரக மூக்குக் கண்ணாடிகளை மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள



தேர்ந்த ஒரே ஸ்தாபனம்
564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P. 021 222 2486

கிளைகள்:-
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக,
இல. 80, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

இல. 91, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.



EXPONET Overseas Consultants www.expogroup.lk

STUDY IN LATVIA (SCHENGEN VISA)

வேலை வாய்ப்புக்களுடன்

நேரடி அனுமதிகள்

இலவசக் கருத்தரங்கு கொழும்பில்

25-09-2015
26-09-2015

VENUE: EXPONET, COLOMBO
9.30 am 12.00 pm

யாழ். மாணவர்களே! அரிய சந்தர்ப்பம்



- LATVIA அரச பல்கலைக்கழகங்களில் இருந்து வரும் கல்விசார் பிரதிநிதிகளை (Represeritative) இனை சந்திப்பதன் மூலம் பல்கலைக்கழக அனுமதிகளைப் பெறமுடியும்.
- FEBRUARY 2016 Intake இற்கான அனுமதிகளை பெற்றுக்கொள்ள விரையுங்கள்.
  எமது அலுவலகத்தில் நடைபெறும் ஆங்கில பரீட்சையில் சித்தி எய்துவதன் மூலம் IELTS இன்றி Visa வினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.
- IELTS இன்றி உயர்கல்வியைத் தொடருவதற்கான அரிய சந்தர்ப்பம். A/L 3 பாட சித்தியுடன் உங்களுக்கு விரும்பிய கற்கை நெறியை தொடர முடியும்.
- Schengen Visa (Sehengen Union) இல் உள்ள 26 நாடுகளுக்கும் சென்று பணிபுரிய முடியும்).
- ஒரு வருடத்துக்கான கட்டணமாக Rs. 350,000/=

#197, Arasady Road, Jaffna. Tel: 021 7538395

No.379-1/2, Galle Road, Colombo 06.
Hotline: 011 7555511/14/18
E-mail: nimal@expogroup.lk

LEGAL REPRESENTATIVE FOR RTU (University)

FLEX Graphic



st Saravana Tex

சரவணா புடைவையகம்

SARAVANA TEXS

எமது கிளைகள் வேறெங்கும் இல்லை

இல. 526,529
பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# நல்லைக்கந்தன் இரதோற்சவ சிறப்பு மலர் - 2015

## நல்லைக்கந்தன் இரதோற்சவ வடம் பிடிக்க வாரீர்

இன்று நல்லைநகர் கந்தப் பெருமானுக்கு தேர்த்திருவிழா. கலியுக வரதன் கந்தன் கைதொழும் அடியார்களின் துன்பங்கையும் துயரங்களையும் இன்னல்களையும் இடுக்கண்களையும் அழிக்கும் நோக்கில் இன்று தேரேறிவருகின்றான்.

ஆதிமுதல்வனான சிவபெருமானுடைய அம்சமான கந்தக்கடவுள் தமது அருட் சக்திகளான வள்ளி தெய்வானையுடன் இன்று தேரிலே ஆரோகணிக்கின்றான். நல்லையம்பதியிலே அருளாட்சி புரியும் ஆறுமுகன், சரவணபவன், ஷண்முகன் இன்றைய நல்ல நாளிலே அழகுத்தேரேறி வரும் ஆனந்த கோலாகலக் காட்சி அற்புதமயமானது.

இந்த அற்புத ஆனந்த அருட்திருவிழா காண வரும் அடியார்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று ஷண்முகப் பெருமானுடைய திருவருட்கடாட்சத்துக்குப் பாத்திரமாகி இந்த உலகில் சீரோடும் சிறப்போடும் வாழவேண்டுமென அருளாசிகள் நல்கி உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

ஆறுமுக வேலவனின் ஆனந்தமான இரதோற்சவம் சிறப்புற எமது நல்லாசிகளை வழங்கி முருகனைச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து வணங்கி நிற்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'




ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள், ஆதீன குருமுதல்வர்,
இரண்டாவது குரு மஹா சந்நிதானம்
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானோர்- ஒளிவின்றி வந்து வணங்கும் வளஞ்சேர் நல்லூர்

தமிழ்க்கடவுள்எனப்போற்றப்படும் முருகப்பெருமானுடைய ஆலயங்களுள் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயமாகத் திகழ்வது யாழ்ப்பாண நல்லூர் இராசதானியில் அமைந்துள்ள நல்லூர் முருகன் ஆலயம். இவ்வாலயம் காலத்தால் முற்பட்டது. அது மட்டுமல்லாமல் ஈழத்துச் சித்தர்கள் எனப் போற்றப்படும் கடையிற் சுவாமி, செல்லப்பா சுவாமி, தவத்திரு யோகர் சுவாமிகள் நடமாடிய புண்ணிய பூமி. இவர்களுள் செல்லப்பா சுவாமிகள் சண்முகப்பெருமானுடைய தேர் முட்டிப்படியிலேயே எநநேரமும் ஏதோ ஒன்றை வாயில புறுபுறுத்தபடி முனங்கிக் கொண்டே இருப்பார்.



இதை யோகர் சுவாமிகள்தனது நற்சிந்தனை எனும நல் அமுத நூலில்

*"தேர்முமட்டிப் படி மேலே - கிளியே*
*செல்லப்பன் என்ற சீமான்*
*ஆர்வமுடன் இருக்கிறானடி -கிளியே*
*அங்கு செல்வோம் வந்திடி"*

என்று மிகவும் அழகாகக் கூறுவதைக் காண லாம். நல்லூர் சண்முகப்பெருமானை தேரடிச் சித்தர்கள் வேலுருவில் போற்றி வழிபட்டுள்ளார்கள். ஆகையால் தான் இன்றும் பெருமானுடைய தேர்முட்டியையும் வில்வமரத்தையும் கந்தப் பெருமானுடைய அடியவர்கள் தினந்தோறும் சுற்றி வணங்கும் நிகழ்வு நடைபெறுகின்றது. இதை மற்றைய ஆலயங்களில் காணமுடியாது.

அத்தோடு தேர்முட்டியின் அருகில் தினந்தோறும் அடியவர்கள் கந்தப் பெருமானின் புகழைப் பாடுவதோடு நற்சிந்தனை பாடல்களையும் பாடி வருகின்றனர்.

யோகர் சுவாமிகள் நற்சிந்தனையில் கந்தப்பெருமானை மனதார வணங்கி வருகின்ற அடியவர்களின் வாழ்க்கையில் ஏற்படுகின்ற இடர்கள் எல்லாம் சூரியனைக் கண்ட பனி போல அகன்று சென்று விடும் என்று கூறியுள்ளார்.

*"எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போமே."*

என்று அழகாக யோகர் சுவாமிகள் கூறியுள்ளார்.

இன்று நல்லைப்பதிக்கு அரசனாக இருந்து அருளாட்சி புரிகின்ற கந்தப் பெருமானுடைய ஆலயத்திற்கு 2012 ஆம் ஆண்டு அழகான ராஜ கோபுரம் கட்டப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றது. இந்த வருடம் மஹோற்சவத்துடன் வடக்கு வீதியில் நவதளங்களைக் கொண்ட குபேரவாசலில் அழகிய தூலலிங்கம் என்று போற்றப்படுகின்ற ராஜகோபுரம் ஆலயத்தின் அழகிற்கு அழகு சேர்ப்பது போல கம்பீரமாக காட்சியளிக்கின்றது. கடந்த கார்த்திகை திருவிழா அன்று குடமுழுக்கு நடைபெற்று கடந்த 09.08.2015 ஆம் திகதியன்று ராஜ கோபுரத்திற்கான கலசங்கள் வைக்கும் நிகழ்வு நடைபெற்றது.

அன்று அந்த கிரியைகளில் கலந்து கொண்ட முருக அடியவர்களிடம் அந்தகலசங்கள் பகுதி பகுதியாக கழற்றப்பட்டு ஒவ்வொரு முருக அடியவரினதும் கைகளாலும் அந்த கலசம் செல்ல வேண்டும் என்ற நல் லெண்ணதோடு ஒழுங்கு முறையில் கோபுர உச்சிக்கு எடுத்துச் சென்று அங்கு பொருத்தப்பட்ட காட்சி ஒவ்வொரு முருக அடியார்களின் உள்ளத்திலும் தனது கையால் சண்முகப் பெருமானுடைய கோபுரத்திற்கு கலசம் எடுத்து செல்லப்பட்டது என்ற உணர்வை ஏற்படுத்தியது. இது மற்றைய ஆலயங்களில் நடைபெறாத ஒரு நிகழ்ச்சி.

யோகர் சுவாமிகள் தனது தீர்க்க தரிசனத்தின் மூலம் அன்று ஓங்கு எழில் கோபுரம் மிளிரக் கண்டேன். என்று பாடினார். சுவாமிகளின் திருவாக்கு பொய்த்துப் போகவில்லை. அந்த ஓங்கு எழில் கோபுரம் இன்று வானுயர்ந்து நிற்கின்றது என்றால் அது மிகையாகாது.

*"நல்லூரை கும்பிட்டு நீ பாடு -அதனாலே*
*நாட்டில் உள்ள பிணிகள் ஓடும்"*

என்று பாடினார் யோகர் சுவாமிகள். எம் மக்கள் பட்ட துன்பங்கள் துயரங்கள் எல்லாம் விலகி பெருமானுடைய வடக்கு வாசல் ராஜகோபுர கும்பாபிஷேகத்தில் ஒரு புது வாழ்வு ஆரம்பிக்கும் என்பது முருக அடியார்களுடைய நம்பிக்கை.

நல்லூரானிற்கு பாமாலை சூட்டாத யாழ்ப்பாணத்துக் கவிராயர்கள் இல்லை என்றே கூறலாம். ஆயினும் அநுபூதிச் செல்வர் ஒருவரால் அருளப் பெற்ற நல்லமுதப் பாடல்கள் என்ற வகையில் தவத்திரு யோகர் சுவாமிகளது நல்லூர் பாடல்கள் தனிச் சிறப்பு பெற்றவை.

தரத்தில் மாத்திரமின்றி அளவிலும் பெரியவை. நற்சிந்தனை முற்பகுதியில் அநேக பாடல்கள் யாவும் நல்லூர்க்கந்தப் பெருமானுடைய புகழைப்பாடும் பாடல்களாகவே காணப்படுகின்றது.

*"நல்லூரை கும்பிட்டு நீ பாடு." எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால்..",*
*"கிட்ட நெடுக்கையிலே கிளியே கிடு கிடு என்று..."*

போன்ற பாடல்கள் கந்தப் பெருமான் அடியவர்களின் சிந்தையில்உறைந்துள்ளவை. இப்பாடல்களை நாள்தோறும் பாடும் அடியவரும் உளர்.

பெருமானுடைய இருபத்தைந்து நாளும் நடைபெறும் திருவிழாவின் போதும் நடைபெறும் பஜனையின் இறுதியல் நற்சிந்தனை பாடலகளைப் பாடுவது வழக்கம்.

சிறப்பிற்கு உறைவிடமான சிவகுருநாதன் தான் உறைவதற்கு ஏற்ற நல்ல உளராம் நல்லூரை கொண்டனன். அது நீர்வளம் நில வளம் குறையாதது என சுவாமிகள் தனது நல் அமுதத்தில் குறிப்பிடுகிறார். நல்லைப் பதியில் பெருமானிற்கு கிரியைகள் நடத்துகின்ற அந்தணர்கள் "அயலறியா அந்தணர்" அயலவர் அறியாத வண்ணம் அடக்கமாக வாழ்வதுடன்சோதிரூபமாக உள்ள வேல் பெருமானிற்கு ஒன்றிய சிந்தையுடன் பூசை வழிபாடு இயற்றுவார்கள்.


நல்லைப் பதியில் உறையும் பெருமானை தேவர்களும் சித்தர்களும் வந்து வழிபட்டு செல்வர்.

**"வானோர் - ஒளிவின்றி வந்து வணங்கும் வளஞ்சேர் நல்லூர்"**

இப்படியெல்லாம் வார்த்தைகளால் கூறமுடியாத சிறப்புகள் உள்ள நல்லைபெருமானை நாம் வணங்கி பேரின்ப வாழ்வு பெறுவோமாக.

*" நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்*
*நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் - நல்ல மயில*
*ஏறி வந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன்*
*தேறி விடும் சிந்தை தெளி"*

காரை
**செல்லத்துரை லோகேஸ்வரன்**
ஆசிரியர்



## வேலிருக்க அஞ்சாதே மடமை நெஞ்சே

தேரேறி நல்லூரான் வீதி வந்தால்
திரண்டேதான் பக்தரெலாம் ஒன்று கூட
பார் மாறிக் கடல்போல ஆகி நிற்கும்
பல தலைகள் அசைவதும் அலைகள் ஒக்கும்
கார் போன்ற கருந்தலைகள் மேலே கந்தன்
கனிந்த ரதம் அசைந்துவரும் காட்சி கண்டார்
தேர் மீது முருகன் என நினைய மாட்டார்
திரண்ட கடல் மீது வரும் பரிதி என்பார்

கம்பவாரிதி ஜெயராஜ்

## தேரேறி வந்திடு

தேரேறி வருமாறு முருகா - எங்களை
சிறப்பேறி செய்தவனேமருகா
பார்போற்றும் அழகனே கந்தா - நல்லை
பதிவாழும் பார்வதியாள் குமரா
தனமும் கல்வியும் தந்தவனும் இவனே - இந்த
தரணிக்கு வசந்தமும் தந்தவனே முருகா
மனமும் அமைதியில் ஆழ்ந்திடுமே உன்னால் - இந்த
மாநிலமே மாண்புறுமே நல்லூரான் மகிமை

யாழ்.கேந்திரன்

## தேர்ப்பவனி வரும் நல்லூரானைப் பணிகிறேன்...

மஞ்செனும் முகிலைமுட்டும் பல இராச கோபுரங்கள்
பார்ப்பவரின் மனங்களிலே பக்தியெனும் விதைவிதைக்கும்
வெஞ்சமரில் வெற்றி கண்ட வேலேந்தி விளையாடும்
வீரத் தமிழிறைவன் யாழ்ப்பாணம் நல்லூரிற்
குஞ்சரியான் குறவள்ளி தேவர் குலத்திலகம்
தெய்வானைப் புடைசூழத் தேர்ப்பவனி வரும்வேளை
பஞ்சம் பிணிதுயரம் பஞ்சாய்ப் பறந்துவிடும்
பரம குருதாளைப் பறந்து விடும்
பரம குருதாளைப் பக்தியுடன் பணிகின்றேன்

சின்னையா சிவபாலன்,

## தேரேறும் அலங்காரக் கந்தனுக்கு அரோகரா!

அலங்காரக் கந்தனுக்கு அரோகரா
ஆறுமுக சுவாமிக்கு அரோகரா
நலம் தரும் நல்லூரானுக்கு அரோகரா
நாறு மாலை வேலனுக்கு அரோகரா
நிலம் தரும் நீல மயிலுக்கு அரோகரா
நிரந்தர தீர்வருளும் கந்தனுக்கு அரோகரா
வலம் வர தேரேறும் சுவாமிக்கு அரோகரா
வழிகாட்டி வாழ்வு தரும் ஈசனுக்கு அரோகரா

அருள்-தமிழ்ச்செல்வி

## நல்லைக்கந்தன் நனிவிருத்தம்

நம்பியுன் காலைப் பற்றி
நற்றமிழ்க் கவிதை பாடி
வெம்பியே யழுது போற்றி
வேண்டிநிற் கின்றே னையா
நம்பிக்கை நீயே யன்றி
நாடுதல் வேறொன் றில்லை
நம்பி "கை" வைத்துக் காக்க
நண்ணுவாய் நல்லைக் கந்தா

கலாபூஷணம்,
நவ.பாலகோபால்

## நல்ல வரம் தந்திடும் நாயகனே

நல்லூரம்பதி அமைந்த நல்லூர்க் கந்தனே
எனக்கு நல்ல வரம் தந்தருள்வாய் நல்லூர் கந்தனே
யாழ் நகரின் மத்தியிலே எழுந்தருள் எங்கள்
நடுநகர் செழித்திடவே அருள்புரிவாய் அப்பா
தேர் ஏறி வலம் வர பக்தர்கள் காவடிகள்
கற்பூரச்சட்டி எடுத்துவர கோடி வரம் கொடுத்திடும் கோமகனே
எங்கள் குறைகள் எல்லாம் தீர்ப்பவனே
நல்லூர்பதி அமைந்த நல்லூர் கந்தனே

மாவை. கலட்டியூர்
செல்வராஜா-இளங்கோவன்

## தேரிலே முருகன்

ஊரெல்லாம் கூடி இழுக்கவே
உகந்த தேரிலே
பாராளும் கந்தனாம்
நல்லூர் பதியிலே
செவ்வேல் தாங்கியே வேகமாய் வருகிறான்.
தீவினை அழித்து நல்வினை ஊட்டிட
நின்றாடும் வேலனை
கரம் ஓங்க துதித்திடுவோம்.

நி.கவியழகன்

## மெள்ளவே தேரிழுத்தால் மேதினியாழலாமே!

மந்திர வேள்விசெய்யும் மாமறை யாளர்சூழும்
சுந்தர நல்லூர்தன்னில் துருசுகள்நீக்கியாழுஞ்
சந்திர பிறையான் தந்தசண்முகக் கடவுளின்று
சிந்துரவண்ண தேரேறும் திருவினைச் செப்பலாமோ
மறைமொழி ஆகமங்கள் மாண்புறு சாஸ்திரங்கள் ஐயன்
அறைகழ லிணையையஞ்சி ஐயவென் றோங்கி நிற்க
நிறை புகழ் நல்லைக் கந்தன் நிட்களசகள னின்றெம்
கறையினை நீக்கிக்கருணையாம் தேரேறும்
காட்சியைக் காணலாமோ?

சக்திகிரீவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா


சிறப்புமலர்- 11.09.2015



## ஓடி வரவேண்டும் எமைத் தேடியே

கண்ணுதலான் மகனுக்குத் தேரோட்டமாம்-இங்கு
மண்ணுலகில் அதுபெரிய கொண்டாட்டமாம்
விண்ணுலகில் வாழ்வோரைக் காத்தவன் முன்னே-வழிபாடு
பண்ணலுடன் உருகும் பக்தர் கூட்டம் என்னே.
நாடோடிகள் போல் எங்கும் அலைந்தோமையா-பல
காடோடி உறவுகள் பல தொலைத்தோமையா!
வீடோடி வரவேண்டும் வனம் யாவுமே-நீ
ஓடோடி வரவேண்டும் எமைத்தேடியே

**ஆனந்தன், வண்ணார்பண்ணை.**




நம்பமுடியாத விலையில்.....

**4 CH CCTV CAMERA**

**CCTV Camera**

உங்கள் வியாபார நிறுவனங்களை, வீடுகளை மற்றும் சொத்துக்களை 24 மணிநேரமும் பாதுகாக்கும் நோக்குடன்

உங்களுடன் நாம்

HOTLINE 021 5 676767
075 999 7798

- Internet, Mobile மூலம் எங்கிருந்தும் கண்காணிக்கும் வசதி.
- ஒரு வருட கால உத்தரவாதம்
- விற்பனைக்கு பிந்திய சேவை
- மிகத் துல்லியமான 24 மணிநேர Video பதிவு.
- இலகுவான கண்காணிப்பு வசதி Monitor / TV மூலம்.
- கணனித்(Computer)தேவை அவசியமற்றது.
- பதிவுசெய்யப்படும் Videoக்களை கடவுச்சொல் (Password) மூலம் பாதுகாக்கும் வசதி.

Full HD 1080P

# 4Ch STARTECH FULL HD DVR
# 4, 1.3 Mega Pixel Bullet Camera
# 19" AOC/HP/Sumsung Moniter
# 1000 GB Hard Disk
# 650V DCP UPS
# 1 Year Warranty
# 2 Year Service Free
# Free Online Setup

Normal Price : 92,500

Discount Price : 80,000

இல. 315,1/2 பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

aj SYSTEMS — Anyplace, Anywhere, Anytime ! Your POS & CCTV Partner

AJ SYSTEMS I (PVT) LTD



விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்

அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு

**DMI COMPUTER EDUCATION**

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

**After A/L IT & English Diploma**

| | |
|---|---|
| Dip.in Information Technology | DiTEC |
| Diploma in Office Automation | DOA |
| Dip. in Pre-Press Desktop Publicating | DTP |
| Diploma in Pc Applications | DPCA |
| Adv. Dip. in Hardware & Networking | ADHN |
| Dip. in Video Production & Multimedia | DVPM |
| Dip.in Web Designing & Development | DWD |
| Dip. in Computerized Accounting | DCA |

Auto CAD, JAVA, C++, PHP, Maya

75% OFF

☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ சர்வதேச அங்கீகாரம் பெற்ற நிறுவன(ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
14/9/2015 (Mon)- 9.30 am.
16/9/2015 (Wed)- 9.30 am.

**யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்**

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

Experts in English Training

சிறந்த வேலைவாய்ப்பிற்கு......
உள்நாட்டு / வெளிநாட்டு உயர் கல்விக்கு...

**Spoken English**
Veta Fluency Diploma

புதிய பிரிவுகள் ஆரம்பம் Time - 10.30 am.
14/9/2015 (Mon) 16/9/2015 (Wed)

GET Enrolled .....
& Feel the Difference.

யாழில் பல்கலைக்கழக, தொழில் புரிவோர், தொழில் தேடுவோர் 5000க்கும் மேற்பட்டோர் தெரிவு செய்து வெற்றி பெற்று நிரூபிக்கப்பட்ட ஆங்கிலப்பாடநெறி

**DMI COMPUTER EDUCATION**

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) **யாழ்ப்பாணம்** Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) **நெல்லியடி** Tel.: 021-226 2470 | No: 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் **சாவகச்சேரி** Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி. NSB வங்கி அருகில் **சுன்னாகம்** Tel.: 021-224 1970 | No.111,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) **கிளிநொச்சி** Tel.: 021-228 5655 |



**சித்தரா**

றெஜிபோம் டிசைனிங் அன்ட் ஸ்கிறீன் பிறிண்டிங்

மங்களகரமான நிகழ்வுகளுக்குரிய றெஜிபோமில் நவீன முறையில் (Indian Technology) வழவமைக்கப்பட்ட எழுத்துக்கள் (ஆங்கிலம், தமிழ், 3D பூக்கள், உருவங்கள், ஐசிங் கட்டிங் மற்றும் நீங்கள் விரும்பிய டிசைன்களில் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

வர்த்தகர்களுக்கு விஷேட விலைக்கழிவு உண்டு.

இல 49A, அச்சுக்கூட லேன், கொக்குவில் சந்தி, கொக்குவில். T.P-0755445901



**சிவானந்தா கபே**



648, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. : 021 7210692


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர்-11.09.2015












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கில் மண்ணகழ்வு தொடர்கிறது

(கரணவாய்)

**வடமராட்சிகிழக்கில் மண்ணகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.**

இச்சட்ட விரோத மண்ணகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதால் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் நள்ளிரவு வேளைகளிலே இம்மண்ணகழ்வு இடம்பெற்று வருகின்றது எனவும் பொது மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மண்ணகழ்வை மேற்கொள்ளும் சிலரை பொது மக்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

அத்துடன் அது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிக்கையில், மண்ணகழ்வைத் தடுக்க சட்ட நடவடிக்கை விரைவில் எடுக்கவுள்ளதாகவும் அவ்வாறு மண்ணகழ்வினை மேற்கொள்ளும் நபர்கள் கைது செய்யப்பட்டால் நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லப்படுவார்கள் எனத் தெரிவித்துள்ளார். (இ-5-60)

## ஆன்மீக உரை

(யாழ்ப்பாணம்)

சத்திய சாயி நிறுவனத்தின் தமிழ் நாட்டு மாநில முன்னாள் தலைவரான ரி.ஜி.கிருஸ்ணமூர்த்தி வழங்கும் விசேட ஆன்மீக உரை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன்பாக அமைந்துள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெறவுள்ளது.

அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வட பிராந்திய சத்திய சாயி சேவா நிலையம் அறிவித்துள்ளது. (இ-5)

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் 6 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள முன்பள்ளியில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையின்போது கட்டட விண்ணப்பம், ஆதனவரி செலுத்துதல், ஆதன பெயர் மாற்றம், ஆயுள்வேத வைத்திய சேவை என்பன நடைபெறும்.

எனவே மேற்படி நடமாடும் சேவைக்கு அனைவரையும் கலந்து பயன் பெற்றுக்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-5)


## முதியோர் பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முதியோர் பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் கைதடி முதியோர் இல்லத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதற்கமைய தலைவராக சுப்பையா பரஞ்சோதி (நல்லூர் பிரதேச செயலகம்), உப தலைவராக செபமாலை சூசை அப்பு லெம்பேட் (நானாட்டான் பிரதேச செயலகம்), செயலாளராக கந்தையா- இராமச்சந்திரன் (வவுனியா பிரதேச செயலகம்), உப செயலாளராக பேதுரு- அமிர்தநாதன் (முல்லைத்தீவு பிரதேச செயலகம்), பொருளாளராக சோமசேகரம்பிள்ளை செல்வராணி (கரைச்சி பிரதேச செயலகம்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் 5 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-5-134)

## துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாணசபை உறுப்பினர்களுக்கான 2015 ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து தனது ஒதுக்கீட்டின் மூலம் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளை வழங்கி வைக்கும் திட்டத்தின் ஒருபகுதியாக வலிகாமம் வலயத்துக்குட்பட்ட ஒன்பது மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகளை வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் நேற்று முன்தினம் புதன்கிழமை வழங்கி வைத்தார்.

மருதனார்மடத்தில் அமைந்துள்ள வலிகாமம் வலயக்கல்விப் பணிமனையில் இடம்பெற்ற துவிச்சக்கர வண்டிகளை வழங்கும் நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினருடன் மாணவர்கள் மற்றும் வலயக்கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், கணக்காளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-7)

## வியாபார அனுமதிப் பத்திரத்துடன் மருத்துவச் சான்றிதழும் வேண்டும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்வச பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் மஹோற்சவ காலங்களில் ஆலயச் சூழலில் அமைக்கப்படும் உணவகங்கள் மற்றும் சிற்றுண்டி விற்பனை நிலையங்கள் அனைத்தும் வியாபார அனுமதி பெற்றிருப்பதோடு மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

இவற்றினை பெறத் தவறும் உரிமையாளர்கள் ஆலயச் சூழலில் உணவகங்கள் மற்றும் கடைகள் அமைக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஹோற்சவ பெருந்திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 4 ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்றது.

அக்கலந்துரையாடலின்போதே திருவிழாக்காலங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள விடயங்கள் தொடர்பில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

ஆலயச் சுற்றாடலில் சுகாதாரத்தைப் பேணல், நடைபாதை வியாபாரம் ஆலயச் சுற்றாடலில் தடை செய்யப்பட்டுள்ளதுடன் ஒலிபெருக்கி பாவனைகள் என்பவற்றை ஆலய நிர்வாகம், பிரதேச செயலகத்தை தவிர வேறு யாரும் பாவிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

ஆலயச் சூழலில் சிகரெட், மதுபானம், பாக்கு, வெற்றிலை, மாமிசம் மற்றும் போதைப் பொருட்களின் பாவனை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் எச்.ஐ.வி. தொற்று ஏற்பட வாய்ப்புள்ள காரணத்தினால் பச்சை குத்துதல் என்பன ஆலயச் சூழலில் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

இனிப்புப் பண்டங்களை விற்பனை செய்பவர்கள் கண்ணாடிப் பெட்டியில் அதனை வைத்து விற்பனை செய்ய வேண்டும்.

மேலும், க ச்சான் விற்பவர்கள் நடமாடித்திரிந்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் கச்சான் வறுத்தல் ஆலய வீதிகளில் தடை செய்யப்பட்டுள்ளது.

அன்னதான மடங்களில் சமையல் மேற்கொள்பவர்கள் மருத்துவச் சான்றிதழ் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்.

ஆலய வீதியில் கடைகள் அமைக்கப்படும் போது அக்கடைகளிற்கு முன் குப்பைக்கூடை வைத்திருத்தல் அவசியம். மடங்களில் இருக்கும் சாப்பாட்டு மீதிகள் உடனுக்குடன் அகற்றப்படுதல் வேண்டும்.

பொருட்களின் விலையினைக் கட்டுப்படுத்த விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களம் வழமைபோன்று தம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். பிரதேச செயலகத்தின் தற்காலிக அலுவலகம், தற்காலிக பொலிஸ் நிலையம் என்பன மஹோற்சவ காலத்தில் ஆலய வளாகத்தில் இயங்கும்.

சமுத்திர தீர்த்தத்தின் போது கடற்படையினர் உயர்பாதுகாப்பு, கடற்கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுவர்.

பருத்தித்துறை பிரதேச சபையினர் குடிநீர் விநியோகம், கழிவகற்றல், நீர்வழங்கல் சேவை என்பவற்றை மேற்கொள்ளும்.

இவர்களுடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நீர் வழங்கல் சேவையை மேற்கொள்ளும்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை முதலுதவிச் சங்கம், சாரணர்கள் என்போர் சேவையில் ஈடுபடுவார்கள்.

இதனைவிட வடமராட்சி சிற்றூர்திச்சங்கம், பருத்தித்துறை இ.போ.ச.தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம் போன்ற விசேட போக்குவரத்துச் சேவையினை நடத்தவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5.60)




## பிரதேச செயலகங்கள் ஊடாக விண்ணப்பித்து மணல் பெறலாம்

### யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் மணல் தேவை உடையவர்கள் தத்தமது பிரதேச செயலகங்கள் ஊடாக விண்ணப்பித்து மணலைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

அதில் கருத்து தெரிவிக்கும் போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மண்ணகழ்வு நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் நாகர்கோவில் பகுதியில் ஒரு மாதத்திற்கு 580 உழவு இயந்திர மணல் அகழ்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே மக்களின் அன்றாட தேவையை கருத்திற் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட மண்ணகழ்வு மேற்கொள்வதற்கு அனுமதி வழங் கப்பட்டுள்ளநிலையில் மணல் தேவை உடையவர்கள் அவர்களது பிரதேச செயலகங்களில் உள்ள விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து கொடுக்கும் பட்சத்தில் அந்தந்த பிரதேச செயலாளர்கள் மருதங்கேணி பிரதேச செயலர் ஊடாக மணலைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

இவை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படுவதால் விண்ணப்பங்களின் அடிப்படையில் தான் மணல் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## நிறைகுறைந்த பாண் விற்றால் அனுமதிப்பத்திரம் இரத்தாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நிறை குறைந்த பாண் விற்பனை செய்யும் வெதுப்பகங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றின் வியாபார அனுமதிப் பத்திரம் தற்காலிகமாக இரத்துச் செய்யப்படும் என யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் இணைப்பதிகாரி த.வசந்தசேகரம் தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் பாதுகாப்புக் குழுக் கூட்டம் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது. இதன்போது கருத்து. தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் கடந்த ஓகஸ்ட் மாதம் வரை நிறை குறைந்த பாண் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பாக 11 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் ஒரு வெதுப்பகத்தில் இரண்டு மூன்று தடவைகள் இவ்வாறான குற்றங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எனவே இனிவரும் காலங்களில் ஒரு தடவைக்கு மேல் நிறை குறைந்த பாண் விற்பனை செய்யும் வெதுப்பகங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றின் வியாபார அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்பட்டு நீதிமன்ற வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

அத்துடன் முச்சக்கர வண்டிகளில் வெதுப்பக உணவுப் பொருட்கள் விற்பனை செய்பவர்கள் கட்டாயமாக தராசு வைத்திருக்க வேண்டும். மேலும் வெதுப்பக உணவுப் பொருட்கள் அனைத்திலும் உற்பத்தி.திகதி, முடிவுத் திகதி, விலைப் பட்டியல் என்பன காட்சிப்படுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குமரன் பத்மநாதன் குறித்து சட்டமா அதிபரின் விளக்கம்

(கொழும்பு)

**அவன்கார்ட் வழக்கு மற்றும் கே.பி என அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் குறித்து ஊடகங்களில் வெளியான தகவல்களைக் கவனத்திற்கொண்டு சட்ட மாஅதிபர் திணைக்களம் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி அறிக்கை வெளியிட்டுள்ளது.**

மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் தொடர்பில் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் கீழ் விசாரணைகளை முன்னெடுக்குமாறு கடந்த ஜூன் மாதத்தில் சட்டமா அதிபரால், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்ததாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றம் முன்னிலையில் நிரூபிக்கக் கூடிய, போதுமான சாட்சியங்கள் இருப்பின் மாத்திரமே குற்றச் செயல் குறித்து முறைப்பாடு செய்யமுடியும்என்றும்சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று, மக்கள் மத்தியில் பரவுகின்ற வதந்திகளின் அடிப்படையில் செயறபடக்கூடாதெனவும் சட்டமா அதிபரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, கே.பி என அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் என்பவர் தொடர்பில் முன்னெடுக்கப்படுகின்ற பயங்கரவாத செயற்பாடுகள் குறித்த விசாரணைகள் முழுமையாக நிறைவுபெறவில்லை என்றும் சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த விடயம் குறித்து தொடரப்பட்டுள்ள ரிட் மனுவின் பிரகாரம், 193 பயங்கரவாத செயற்பாடுகள் மற்றும் கே.பி என்பவரின் ஏனைய குற்றவியல் செயற்பாடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக சட்டமா அதிபரின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறிப்பிடப்பட்டுள்ள பயங்கரவாத செயற்பாடுகள் தொடர்பில் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக சட்டமாஅதிபரால், நீதிமன்றத்திடம் நியாயமான கால அவகாசம் கோரப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத செயற்பாடுகள் குறித்து பொலிஸ் திணைக்களத்தின் கண்காணிப்பு அறிக்கையொன்றை சட்ட மா அதிபர் திணைக்களம் கோரியிருந்த போதிலும், அனைத்து சம்பவங்கள் தொடர்பிலான தகவல்களையும் பொலிஸார் இதுவரை சட்டமா அதிபர் திணைக் களத்திற்கு சமர்ப்பிக்கவில்லை எனவும் சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)


**டயானா பிளாஸ்ரிக் மீள் சுழற்சி**

சகல விதமான உடைந்த பிளாஸ்ரிக் போன்றவை உத்தரவாதத்துடன் ஒட்டிக் கொடுக்கப்படும்.

* **பழைய பிளாஸ்ரிக் விலைக்கு வாங்கப்படும்.**

(C-1812)

108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 077 5925088, 021 222 8680



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி. விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் 09.09.2015ம் திகதி சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக பதவியேற்றதை வரவேற்று பாராட்டி வாழ்த்துகின்றோம்.



தமிழ்நாட்டில் ஒரு ஜெயலலிதா அம்மையார் என்றால் இன்று யாழ்குடாநாட்டில் ஒரு விஜயகலா அம்மையார்.

இச்சரித்திர நாயகியின் அயராத சேவை மென்மேலும் மக்களுக்கு தொடர வாழ்த்துகின்றோம்.

காங்கேசன்துறை தொகுதி அமைப்பாளரும் பிரதேச வாழ் மக்களும்.



## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 71 செவ் 8 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/634 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 62 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: G/1079 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 28<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/635 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 33<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/1081 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 13<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: B.COM/ வங்கி முகாமையாளர்<br>தொ.இ: B/636 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 52 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: HNDA<br>தொ.இ: G/1090 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 41<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, MSC/ அரச தொழில்<br>தொ.இ: B/639 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 14 செவ் 12 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/1095 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## ராசி பலன்

11.09.2015
(ஆவணி 25, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
திரயோதசி முற்பகல் 9.05 மணிவரை
ஆயிலியம் முற்பகல் 9.54மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணிவரை
நல்லைக்கந்தன் தேர்
கீழ்நோக்கு நாள்
வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்திராடம்<br>காலை 10.00ற்கு<br>சிம்-சந் | | செவ் சுக் சந் |
| | | | சூரி குரு |
| | சனி | | புத ராகு |

**மேடம்:** சந்தித்தவர்களால் சந்தோசங்கள் கிடைக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர்.

**இடபம்:** பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வீட்டில் விருந்தினர் வருகையுண்டு, வழிபாடு காரிய வெற்றி தரும், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசியவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், சுபநிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்:** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சுபநிகழ்வுகள் நடைபெறலாம், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, சிந்தனை மிகுதியான நாள்.

**சிம்மம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒழிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.

**கன்னி:** சுப விரயங்கள் கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**துலாம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் முன்னேற்றப்பாதையை நோக்கிச் செல்லும், விரதம், வழிபாடுகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், போசன சுகமுண்டு.

**தனுசு:** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், ஆலய வழிபாட்டில் ஆர்வம் கூடும், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும்.

**மகரம்:** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், அலைச்சல்கள் கூடும், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை.

**கும்பம்:** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மீனம்:** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், காணாமற் போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கும் வாய்ப்புண்டு, உற்சாகத்துடன் பணி புரிவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகள் அமைக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிப்பு

(மல்லாவி)

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் அமைக்கப்பட்ட 168 புதிய வீடுகள், 19 திருத்தி அமைக்கப்பட்ட வீடுகள் என்பன பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அந்தந்த பகுதி பிரதேச செயலாளர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதற்கமைய மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் பிரதேச செயலாளர் எஸ்.பிருந்தாகரன் தலைமையில் முற்பகல் 10 மணிக்கு புதிய வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இதில் இந்திய உயர்ஸ்தானிகர் ஆலயத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு புதிதாக அமைக்கப்பட்ட 17 வீடுகளைக் கையளித்தத்துடன் 19 பகுதி திருத்தத்துடனான வீடுகளும் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மொத்தக் குடும்பங்களுக்கும் வீடுகள் பூர்த்தி செய்யப்பட்ட கிராமமாக சிராட்டிக்குளம் கிராமம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2-15)

# அரச உத்தியோகத்தர் விடுதியில் நூதனமான முறையில் திருட்டு

வவுனியா உள்வட்ட வீதியில் அமைந்துள்ள அரச உத்தியோகத்தர் வசிக்கின்ற விடுதியில் நூதனமான முறையில் திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி விடுதியிலுள்ள வீடொன்றிற்கு வருகை தந்த ஆணும் பெண்ணும் அங்கிருந்த பெண்ணிடம் முகவரியொன்றினை கேட்டுவிட்டு தண்ணீர் தருமாறு கோரியுள்ளனர்.

இந்நிலையில் தண்ணீரை கொடுப்பதற்காக பிரஸ்தாப பெண் அங்கு வந்திருந்தவர்களுக்கு அருகாமையில் சென்றதும் அங்குநின்ற ஆணும் பெண்ணும் தண்ணீர் கொடுத்த பெண்ணின் முகத்தில் கையை வைத்துள்ளனர்.

உடன் மயக்கமடைந்த அப்பெண்ணின் கழுத்தில் இருந்த சுமார் 2 இலட்சம் பெறுமதியான நகைகளை திருடிக்கொண்டு சென்றுள்ளனர்.

மயக்கம் தெளிந்த பெண் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (2-250)

# வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தும் வேலைத்திட்டம் ஆரம்பம்

(மல்லாவி)

**தேசிய உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட மாங்குளம் நகரப்பகுதி திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயப் பகுதி, ஒட்டுசுட்டான் நகரப் பகுதி ஆகிய இடங்களில் 50 வீதி மின்விளக்குகள் பொருத்தும் வேலைத்திட்டம் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் குமாரசாமி மிதிலைநாதன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

தேசிய உள்ளூராட்சி வாரம் கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 14 திங்கட்கிழமை வரை கடைப்பிடிக்கப்படுகின்றது.

இக்காலப்பகுதியில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட பல இடங்களில் பொது மக்களுக்கான பொது வசதி வாய்ப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றது.

இதன் ஓர் அங்கமாகவே மேற்படி பகுதிகளில் வீதி மின் விளக்குகள் குறித்த நகர வர்த்தகங்களின் ஒத்துழைப்புடன் பிரதேச சபையினரால் முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்கமைய மாங்குளம் நகரப்பகுதியில் 15, திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயப் பகுதியில் 10, ஒட்டுசுட்டான் நகரப் பகுதியில் 25, ஆக மொத்தம் 50 மின் விளக்குகள் முதல் கட்டமாக பொருத்தப்படவுள்ளன.


இதனைத் தொடர்ந்து மேலும் மக்கள் குடியிருப்பு பகுதிகளிலுள்ள பொது இடங்களில் மின்விளக்குகள் பொருத்தும் பணி நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மாங்குளம் நகரப்பகுதியில் தெரு மின்விளக்குகள் அமைக்கப்படாமை காரணமாக இரவு வேளைகளில் பொது மக்கள் பேருந்து தரிப்பிடங்களில் இருட்டில் அச்சத்துடன் நின்று பயணிப்பவை தொடர்வதாக சுட்டிக்காட்டி வலம்புரி செய்தியை கடந்த மாதம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-15)











உள்ளக விசாரணை வேண்டாம், சர்வதேச விசாரணை வேண்டும் என்பதை வலியுறுத்தி நேற்று காலை 9 மணியளவில் நடைபயணமொன்று கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகம் முன்பாக ஆரம்பமானது. வடமாகாண சபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், திருமதி அனந்தி சசிதரன் ஆகிய இருவரும் இணைந்து மேற்கொண்ட இந்நடை பயணத்தில் த.தே.கூட்டமைப்பு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டார். இவர்களுடன் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், முள்ளிவாய்க்காலில் தமது உறவுகளை பறிகொடுத்த உறவினர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வலயக்கல்வி அலுவலகங்களூடாக வழங்கப்படும்

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினால் சுற்றறிக்கை அனுப்பி வைப்பு

(மல்லாவி)

நடைபெற்று முடிந்த 8ஆவது பாராளுமன்றத் தேர்தலில் கடமைகளில் ஈடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கான கொடுப்பனவுகள் அந்தந்த வலயக் கல்வி அலுவலகங்களின் ஊடாக வழங்கப்படும் எனதேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய வினால் சுற்றறிக்கை மூலம் வலயக் கல்வித் திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கான தேர்தல் கடமை கொடுப்பனவுகள் அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ள போதிலும் கடந்த ஜனாதிபதி தேர்தல் கடமையின் போதான கொடுப்பனவுகளை தேர்தல் அலுவலகங்கள் ஊடாக வழங்கியபோது தேவையற்ற காலதாமதம் ஏற்பட்டதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் காரணமாகவே மேற்குறித்த சுற்றறிக்கை திருத்தி அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கான கொடுப்பனவுகளை செய்வதற்கு போதியளவு நிதி வலயக் கல்வி அலுவலகங்களில் காணப்படாது விடின், வலயக்கல்வி அலுவலகத்திற்குரிய அனைத்து காசு கட்டளைகளையும் பாடசாலைகளில் இருந்து கிடைக்கப்பெறும் வரை காத்திராமல் அட்டவணையைப் பகுதி பகுதியாக தேர்தல்கள் செயலகத்திற்கு சமர்ப்பித்து அந்நிதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று கொடுப்பனவு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற வலயக்கல்வி அலுவலகங்களின் அலுவலர்களுக்கு அதற்கான ஊக்குவிப்பு படியும் வழமை போலவே வழங்கப்படுமென அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# வாகன விபத்தில் குடும்பப்பெண் படுகாயம்

(குருமன்காடு)

வவுனியா புதூர் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பப்பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை புதூர் ஏ-9 வீதியில் நடைபெற்றது.

மேற்படி வீதியில் அமைந்துள்ள பாடசாலையில் தனது பிள்ளையை விட்டுவிட்டு துவிச்சக்கர வண்டியில் வீடு திரும்பிக்கொண்டிருந்த போதே பின்புறமாக வந்து கொண்டிருந்த எண்ணெய் தாங்கி வாகனம் மோதி இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொதுமக்களால் காயமடைந்த பெண் புளியங்குளம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.



இதேவேளை வாகனத்தின் சாரதி புளியங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# இளைஞர், யுவதிகளுக்கான இலவசக் கற்கைநெறி

(மல்லாவி)

பேராசிரியர் இரா. சிவச்சந்திரனின் சிந்தனைக்கூடம் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள இளைஞர், யுவதிகள், பொதுமக்கள் ஆகியோருக்கு உள்ளூராட்சி நிர்வாகம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக உள்ளூராட்சி அமைப்பு முறைகளும் நல்லாளுகைக்கான வழிகாட்டலும் எனும் தலைப்பில் இலவசக் கற்கை நெறி வார நாட்களில் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறுமென பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, கடந்த 30 வருடகால யுத்தம் காரணமாக வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி அமைப்புக்களின் செயற்பாடுகள் பொது மக்களின் பங்களிப்புடன் நடைபெறவில்லை.

இதனால் மக்கள் இவ்வமைப்பின் நன்மைகளை அடைய முடியாது போனதுடன் பிரதேசங்களின் அபிவிருத்தி வளர்ச்சி குன்றியும் காணப்பட்டது.

வருங்கால இளைய தலைமுறையும் இவ்வாறு பாதிக்கப்படாது உள்ளூராட்சி சபைகளினது அனைத்து நன்மைகளையும் அடைந்து கொள்வதற்கும் அவர்களும் இவ்வமைப்பின் பங்காளிகளாக எதிர்காலத்தில் உருவாகுவதற்கான வழிகாட்டும் செயலாகவே இக்கற்கைநெறி அமைவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, 18 வயதிற்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் மற்றும் ஆர்வமுடையோர் இக்கற்கைநெறியில் இணைந்துகொள்ள முடியும்.

இக்கற்கை நெறிக்கு கல்வித் தகைமை ஒரு தடையல்ல.

முதல் தடவையில் 30 பேர் கொண்ட அணி யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் இருந்து இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பிரதேச ரீதியாக ஏனைய மாவட்டங்களிலும் அந்தந்த பிரதேச செயலக பிரிவுகளில் உள்ளவர்களுக்கு நடத்தப் படவுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் நாளை சனிக்கிழமை 077 726 6 075 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.

அல்லது பேராசிரியர் இரா.சிவசந்திரன், பணிப்பாளர், சிந்தனைக் கூடம், இல 121/5, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தங்கள் வரவினை பதிவு செய்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கைதான ஜெயக்குமாரி பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)



**பொலிஸ் துறையினரின் எதிர்ப்பினையும் மீறி, ஜெயக்குமாரி பாலேந்திரன் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அநுராதபுர கெப்பற்றிக்கொல்லாவ பிரதேசத்தில் இடம்பெற்ற திருட்டு ஒன்று சம்பந்தமாகவே இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.**

இவ்வழக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி விசாரணைக்கு வரவிருக்கின்றது.

கடந்த புதன்கிழமை அவருக்கான இரண்டாவது பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், கெப்பற்றிக்கொல்லாவ நீதவான் நீதிமன்றத்தில் அன்றைய தினம் ஆஜரானார்.

இந்நிலையில் கடந்த மே மாதத்தில் இருந்து ஒவ்வொரு மாதமும் கிளிநொச்சியில் உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் அவர் சென்று வந்த பொழுதும் அவரது நிலுவையில் உள்ள வழக்கு தொடர்பாக அவருக்கு அறிவிக்கவில்லை.

கிளிநொச்சி தருமபுரம் பிரதேசத்தில் வைத்து கடந்த 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி ஜெயக்குமாரியும் அவரது 13 வயது மகளான விபூசிகாவும் குற் றப்புலனாய்வு பொலிஸாரால் கிளி நொச்சியில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கிளிநொச்சி நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைய அவரது மகள் விபூசிகா, கிளிநொச்சி மகா தேவா ஆச்சிரமத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் ஜெயக்குமாரி பூசா தடுப்பு முகாமில் ஒரு வருடமாக தடுத்து வைக்கப்பட்டார்.

பயங்கரவாத விசாரணைப் பிணைக்களத்தால் குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிரூபிக்கப்படாமல் 362 நாட்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பாலேந்திரன் ஜெயகுமாரி இந்நிலையில் கடந்த மார்ச் மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இவரது பிணைக்காக இரண்டு இலட்சம் ரூபா செலுத்தப்பட்டதோடு, அவரது கடவுச்சீட்டு இன்னமும் அவரிடம் கையளிக்கப்படவில்லை. அத்துடன், ஒவ்வொரு மாதமும் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமைச்சுப் பதவி குறித்து திருப்தி அடைய முடியாது

## விஜித ஹேரத் தெரிவிப்பு

நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சுப் பதவிகள் குறித்து திருப்தி அடைய முடியாது என ஜே.வி.பி.யின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சு மற்றும் பிரதி அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொண்ட விதத்தைக் கொண்டே, நல்லாட்சி அரசாங்கத்தின் மோசமான நடவடிக்கைகளை இனம் கண்டுகொள்ள முடியும்.

இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள் நாற்பது பேர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

நல்லாட்சி அரசாங்கம் ஆரம்பத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கையை வரையறுப்பதாகவும், பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கையை வரையறுப்பதாகவும் வாக்குறுதி அளித்திருந்தது.

எனினும், எவ்வித விஞ்ஞான அடிப்படையும் இன்றி அமைச்சு பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளன. இன்னமும் பகிரப்பட்டு வருகின்றது.

மகிந்தவுடன் ஒன்றாக இருந்து சமூக விரோதச் செயல்களுடன் தொடர்புடைய நபர்களுக்கும் பிரதி அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

எந்தவொரு அடிப்படையும் இனறி அமைச்சுக்களுக்கான துறைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

இந்த அமைச்சு மற்றும் பிரதி அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ள விதத்தை பார்த்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வாக்களித்தவர்களும் அதிர்ச்சி அடைவார்கள்.

அதிகாரத்திற்காக அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொள்ளும் நடவடிக்கையே இடம்பெற்றுள்ளது.

எந்தவொரு நல்லாட்சியும் கிடையாது. இலங்கை அரசியலின் இழிநிலை இவ்வாறு அமைச்சுக்களை பகிர்ந்துகொள்வதன் மூலம் வெளிச்சமாகியுள்ளது என விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். பிரதி அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர் பதவி வழங்கப்பட்டமை குறித்து ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# மாத்தறை மக்கள் அதிருப்தி

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரணவிற்கு அமைச்சுப் பதவி வழங்கப்படாமை குறித்து மாத்தறை மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

மாத்தறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளை புத்திக்க பத்திரண பெற்றுக்கொண்டார்.

கடந்த நாடாளுமன்றிலும் புத்திக்க பத்திரண அங்கம் வகித்திருந்தார். இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் முதல் தடவையாக போட்டியிட்டு வெற்றியீட்டிய சிலருக்கு பிரதி அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

எனினும் மாத்தறையில் கூடுதல் விருப்பு வாக்கு பெற்றுக்கொண்ட புத்திக்கவிற்கு பிரதி அமைச்சர் பதவி ஏன் வழங்கப்படவில்லை என மாத்தறை மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (இ-7)

# எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் தெரிவு; தென்னாபிரிக்க தமிழ் சம்மேளனம் பாராட்டு

(கொழும்பு)

இலங்கையின் எதிர்க்கட்சி தலைவராக 32 வருடங்களின் பின்னர் தமிழரான ஆர்.சம்பந்தன் நியமிக்கப்பட்டமை தொடர்பில் தென்னாபிரிக்க தமிழ் சம்மேளனம தமது பாராட்டுக்களை வெளியிட்டுள்ளது.

சம்மேளனத்தின் பேச்சாளர் இது தொடர்பில் வெளியிட்டுள்ள கருத்தில், இளம் வயதிலேயே அரசியலில் ஈடுபட்ட சம்பந்தனை, தாம் பல தடவைகள் சந்தித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

சம்பந்தனை பொறுத்தவரையில் அவர், ஒரு மரியாதைக்குரிய வெளிப்படையாக பேசக்கூடிய ஒருவராக திகழ்கிறார். இந்தநிலையில் அவர் தமிழர் பிரச்சினைக்கு தீர்வைக் காணக்கூடியவர் என்றும் பேச்சாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்தநிலையில் 2009ஆம் ஆண்டு போர்க்குற்றச்சாட்டு தொட



ர்பில் சம்பந்தன் உரியமுறையில் செயற்படுவார் என்றும் தென்னாபிரிக்க தமிழ் சம்மேளனத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.(இ-7)

# இன்று ஒரு தகவல்

## ஆறாதாரம்–மூலாதாரம்

ஐந்தறிவு உடையது விலங்கு. ஆறறிவு உடையவன் மனிதன். ஏழாவது அறிவு பெறுதல் தெய்வநிலை. அதையும் கடந்து எட்டாவது நிலை எய்தினால் எங்குமாய் எல்லாமாய் இருக்கிற பரம்பொருள் நிலை.

பிரபஞ்சத்தின் மிக முக்கிய இயக்கமே படைப்பு. எல்லா உயிரினங்களும் விடாது நிகழ்த்தும் முக்கிய பணியே படைப்பு. இந்த முதல் சக்கரத்தில் தான் நமது ஜீவசக்தி தங்கி இருக்கிறது. தாயும் தந்தையும் கலந்தபோது தோன்றிய ஜீவசக்தி இங்கு வட்டமிட்டு ஒரு பாம்பு போல உறங்குகிறது. அந்த ஆற்றல் அங்கு மட்டுமே செயற்படும்போது ஓர் அறிவு உயிராக மட்டுமே நாம் இருக்கிறோம். ஓரறிவாகிய தொடு உணர்வே காமத்தின் நிலைக்களன். ஆறறிவு மனிதனாகப் பிறந்தாலும் இந்த ஓரறிவு மட்டுமே உடையவராய் வாழ்ந்து செத்தோர் பலர்.

பாலுணர்வு மையத்தில் உள்ள சக்திகள் (Sexual potency) நமக்கு எல்லாமாகப் பயன்படுகிறது. நமது எல்லா இயக்கங்களுக்குமான சக்தி இங்கிருந்துதான் புறப்படுகிறது. பாட, அட, பேச, சிரிக்க, கோபப்பட நமக்குத் தேவையான சக்திகள் எல்லாம் இங்கிருந்துதான் புறப்படுகின்றன. இந்த மூலாதார சக்கரத்தில் நம்முடைய நான் என்ற எண்ணம் சிக்கியிருந்தால் இனவிருத்தி இன்பம் மட்டுமே நம் குறிக்கோளாக இருக்கும். இந்தச் சக்கரத்தில் சிக்கி இருப்பவர் அடையாளம் என்ன?

எப்போது பார்த்தாலும் கீழ்த்தரமான பால் உணர்ச்சி பேசிக் கொண்டே இருப்பார்கள். தொடுகை உணர்ச்சி அதிகம் இருக்கும். பிறர் தம்மைத் தொடுவதையும் தாம் பிறரைத் தொடுவதையும் மிக விரும்புவார்கள். படிப்பு, பரீட்சை, பணிவாய்ப்பு, பணி புரிதல் என்ற எல்லா விடயங்களையும் விட்டு விட்டு ஒரு துணை (!) கிடைக்காதா என்றே எங்கும் தேடுவார்கள். கண்கள் அமைதியின்றி அலைபாயும். துணை கிடைத்தால் எல்லா விடயங்களையும் விட்டு விட்டுக் காம நுகர்ச்சி மட்டுமே இலட்சியமாய் இருப்பார்கள்.

அழகான இளமையான விலை மாது ஒருத்தி பகவான் புத்தர் இளமையாக இருந்தபோது தம்மிடம் வரும்படி வற்புறுத்தினாள். செல்வம் தராவிடினும் இன்பம் தா என்று கட்டாயமாகப் புத்தரை வரச்சொன்னாள். புத்தர் சொன்னார் அவசியம் வரும்பொழுது வருகிறேன் என்று பலகாலம் கழித்து தலைமுடி உதிர்ந்து கிழவியாகி நோய்வாய்ப்பட்டு ஆதரவின்றி அந்த விலைமகள் தவித்த போது புத்தர் அவள் வீட்டிற்குச் சென்றார். ஐயோ இப்போது வந்திருக்கிறாயே...நான் உனக்கு உதவ முடியாதே என்று அழுதாள் விலைமாது. ஆனால் நான் உனக்கு உதவ முடியும் இப்போது தான் நான் உனக்கு அவசியம். அவசியம் வரும்பொழுது வருகிறேன் என்றேன். உனக்கு நான் இப்போது மிக மிக அவசியம் என்று அவளைக் குளிப்பாட்டி தொண்டு செய்தார் புத்தர். அவருக்கு மூலாதாரத்தை விட்டுப் புறப்பட்ட குண்டலினி தலைக்கு வந்து விட்டது என்று பொருள்.

காமமே இல்லாமல் இரு என்று உபதேசம் செய்கிறாயா? என்று கேட்கிறீர்களா? காமம் இல்லாமல் யார் இருந்தார்கள்? யார் இருக்கப் போகிறார்கள்? காமத்தில் இருந்து வெளியில் கிளம்ப என்ன முயற்சி செய்தீர்கள் என்று தான் கேட்கிறேன்? என்ன செய்ய வேண்டும் என்கிறீர்களா? சொல்கிறேன்.

பகவான் புத்தரிடம் சந்நியாசம் பெற்றுத் துறவியானான் ஓர் அரசன். துறவு நெறிப்படி பிச்சை எடுத்து உணவு உண்ண அந்த அரசனை நகருக்கு அனுப்பினார் புத்தர். பிச்சை எடுக்க வேண்டிய வீட்டையும் காட்டிவிட்டுத் திரும்பினார் புத்தர். பிச்சை முடிந்து திரும்பிய சீடன் கலவரத்துடன் இனி அந்த வீட்டிற்குப்போய்ப் பிச்சை எடுக்கமாட்டேன் என்றான் என்ன நடந்தது என்றார் புத்தர்.

அந்த வீட்டு வாசலில் நின்றபோது எனக்குப் பிடித்த உணவுகளைப் பற்றிய எண்ணம் வந்தது. ஒரே ஆச்சரியம். அந்த வீட்டில் அந்த உணவுகளே பரிமாறப்பட்டன. தற்செயலாக நடந்தது என்று எண்ணினேன். உணவு உண்டதும் முன்பெல்லாம் (அரசனாக இருந்த சமயம்) படுத்துறங்குவது வழக்கம். இப்போது யார் அப்படி நம்மைச் சொல்வார்கள் என்று எண்ணினேன். சுவாமி படுத்து ஓய்வெடுத்துச் செல்லலாமே என்றாள் அந்தப் பெண். எனக்குப் பகீர் என்றது. கொஞ்ச நேரத்தில் நேற்றுவரை சொந்தக் கூரையில் சொந்த நிழலில் சொந்தப் படுக்கையில் இருந்தோம். இன்றோ படுக்கை வேறொருவருடையது என்று எண்ணினேன். உடனே அந்தப் பெண் சுவாமி படுக்கை உங்களுடையதுமல்ல! என்னுடையதுமல்ல! இது யாருடைய உடைமையும் இல்லை என்றாள். என் கருத்துக்கள் உனக்கு எட்டுகின்றனவா என்றேன். தியானம் செய்து செய்து மனம் சூன்யமாகி விட்டது என்றான். நான் நடுங்கிப் போனேன். அந்த அழகிய பெண்ணைப் பற்றியும் விகாரமான எண்ணங்கள் என்மனதில் அவ்வப்போது வந்து வந்து போயின. அவற்றையும் அவன் அறிந்திருப்பாளே என்று நடுங்கிப் போனேன். எனவே நாளை முதல் அவள் வீட்டுக்குப் பிச்சைக்கு போக முடியாது என்றார்.

அங்குதான் செல்லவேண்டும் உன் சாதனையின் முதல் பகுதி அதுதான் என்றார் பகவான் புத்தர். மறுநாள் முழுவிழிப்போடு போனார் துறவி. புத்தர் கூறிய யோசனையின் படி தான் செய்கிற ஒவ்வொரு செயலையும் தானே வேறொருவன் போல் விழிப்போடு கண்காணித்தார். தனது மூச்சுக் காற்றுக்கூட அவருக்குத் தெரிந்தது. தாம் உணவு அருந்துவதைக் கூட வேறொருவர் போல அவரே அவரைக் கவனித்தார். செயல் புரிபவரும் அவர். சாட்சியும் அவர். ஆனால் செயல்புரிபவன் தான் அல்ல. பார்த்துக் கொண்டிருப்பவனே தான் என்கிற விழிப்பு ஏற்பட்டது. ஒருவன் கர்த்தா, மற்றவன் த்ருஷ்டா. கர்த்தா தான் அல்ல, த்ருஷ்டா(காண்பவன்) மட்டுமே தான் என உணர்ந்தார். ஆனந்தம் பொங்கியது.

இப்படி நம்முடைய செயல்களை நாமே கவனிப்பவனாகி விட்டால் குண்டலினி மூலாதாரத்தில் இருந்து புறப்பட்டு விடும். இதுவே தியான சாதனையின் முதற்படி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










# போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிட்டுமா?

கடந்த சில ஆண்டுகளாக இலங்கை மீது விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என பல நாடுகள் அழுத்தம் கொடுத்து வந்துள்ளன. ஆனாலும் தற்போது மைத்திரி அரசின் உள்ளக விசாரணைக்கு ஆதரவு வழங்குவதென அமெரிக்கா அறிவித்ததானது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பை உண்டாக் கியுள்ளது.

இவ்வாறு லண்டனில் இருந்து வெளியாகும் Financial Times நாளிதழில் James Crabtree என்ற ஊடகவியலாளர் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனைப் புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்துள்ளவர் நித்தியபாரதி.

இலங்கையின் கொடூரம் மிக்க இறுதிக்கட்ட யுத்தத்தின் போது, இராணுவத்தினரிடம் தனது குடும்பத்தினர் சரணடைந்து 24 மணி நேரத்தின் பின்னரே, இறுதியாக தனது கணவரைக் கண்டதாக இரு கண்களிலும் `நீர் நிரம்பியவாறு முருகதாஸ் கஜேந்தினி கூறினார்.

யுத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்த மே 18, 2009 அன்றே தனது கணவரை இறுதியாகப் பார்த்ததாகவும் அதன் பின்னர் இன்று வரை இவர் தொடர்பான எவ்வித தகவல்களும் தனக்குத் தெரியாது எனவும் கஜேந்தினி கூறுகிறார்.

வடக்கிலுள்ள யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பூங்கா ஒன்றில் இருந்தவாறு கஜேந்தினி தனது கணவர் தொடர்பான தகவல்களைப் பகிர்ந்து கொண் டார். தனது கணவர் விசாரணைக்காக இராணுவப் பேருந்தில் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் இவர் தெரிவித்தார்.

தனது கணவர் யுத்தத்தின் போது மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் ஒரு கையை இழந்திருந்ததாகவும் அவர் தன்னை விட்டுப் பிரிந்த அந்த நாளில் ஒற்றைக் கையுடன் சென்றது இன்றும் நினைவிருப்பதாகவும் கஜேந்தினி தெரிவித்தார்.

'எனது கணவர் இராணுவத்தால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதை நான் எனது கண்களால் பார்த்தேன். அவர்கள் அவரது பெயரைக் கூப்பிட்டு அழைத்துச் சென்றனர். இவர் தற்போதும் உயிருடனிருக்கிறாரா அல்லது இல்லையா என்பதை நான் அறிய வேண்டும்' என்கிறார் கஜேந்தினி.

முன்னாள் ஜனாதிபதியும் [illegible] காலத்தில் நாட்டின் தலைவராகவும் செயற்பட்ட மகிந்த ராஜபக்ஷ நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டமையானது காணாமற்போனவர்கள் தொடர்பில் நீதியை எட்டித்தரும் என நம்புகின்ற, ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்ட மக்களுள் கஜேந்தினியும் ஒருவர்.

தனது பத்தாண்டு கால ஆட்சியின் போது இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு மகிந்த ராஜபக்ஷ தடையாக இருந்தார். மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மீறல்கள் தொடர்பாக மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் கண்டனங்களை முன்வைத்தனர்.

இறுதியாக இலங்கைக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என மேற்குலக நாடுகள் வலியுறுத்தத் தொடங்கின. தற்போது மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியுற்றுள்ள நிலையில் தமக்கு நீதி கிடைக்கும் என மக்கள் நம்புகின்றனர்.

'தற்போது நாட்டில் மீளிணக்க [illegible]
[illegible] இந்த வாய்ப்பு மீண்டும் ஒருபோதும் வராது. ஆகவே இதனைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். என்ன செய்ய நினைத்தாலும் அதனை இப்போது மிகச் சரியாகச் செய்ய வேண்டும். காலதாமதமின்றிய நடவடிக்கை மிகவும் முக்கியமானதாகும்'.

இந்நிலையில் இம்மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பாக அறிக்கை வெளியிடப்படவுள்ளது. மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் இடம்பெற்ற மீறல்கள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் அரசியல் ரீதியான சிக்கல்களை எதிர்கொள்வதற்கு வழிவகுத்துள்ளது.

வடகொரியாவில் இடம்பெற்ற பல்வேறு மீறல்கள் தொடர்பாக 2014ல் வரையப்பட்ட ஐ.நா அறிக்கையானது அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் அழுத்தத்தை ஏற்படுத்தியது. ஆகவே தற்போது இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாடு புதிய அரசாங்கத்தின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் தான் ஏற்கனவே போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணையை மேற்கொள்ளத் தொடங்கியதாக மைத்திரி அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஐ.நா அறிக்கை இம்மாதம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவுள்ள நிலையில் இது இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த அறிக்கையில் காணாமற் போனவர்களின் விப்ரங்கள் மற்றும் போர்க்கால மிகக்கொடூரமான மீறல்கள் போன்றன பதிவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக இலங்கை மீது விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என பல நாடுகள் அழுத்தம் கொடுத்து வந்துள்ளன. ஆனாலும் தற்போது மைத்திரியின் உள்ளக விசாரணைக்கு ஆதரவு வழங்குவ தென அமெரிக்கா அறிவித்ததானது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பை உண்டாக்கியுள்ளது. அனைத்துலக ஆலோசகர்களின் பங்களிப்புடன் உள்ளக விசாரணையை மேற்கொள்வதென இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய-பாகிஸ்தான் எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு ஆரம்பம்

(டில்லி)

**இந்தியா-பாகிஸ்தான் எல்லைப்பாது காப்புப்படை இயக்குனர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தை நேற்று தொடங்கியுள்ளது.**



சமீப காலமாக காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு இந்திய இராணுவம் தக்க பதிலடி கொடுத்து வருகிறது.

இதுதொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே கடும் வார்த்தைப் போர் நடைபெற்று வருகிறது. இரு நாடுகளுக் கிடையே போர் மூண்டால் இந்தியா தாங்க முடியாத விளைவை சந்திக்கும் என்று பாகிஸ்தான் இராணுவ தலைமை தளபதி 2 தினங்களுக்கு முன்பு எச்சரித்திருந்தார்.

இந்நிலையில் ஒன்றரை ஆண்டுக்குப் பிறகு இரு நாட்டு எல்லை பாதுகாப்புப் படை இயக்குனர்கள் நிலையிலான பேச்சுவார்த்தை ஏற்கெனவே திட்டமிட்டபடி டில்லியில் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பல்வேறு முக்கிய முடிவுகள் எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை இந்திய-பாகிஸ்தான் பாதுகாப்பு ஆலோசகர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தை தடைப்பட்ட நிலையில் எல்லை பாதுகாப்புப்படை அதிகாரிகளுக்கிடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-7)

## மாணவியர் மீது நச்சு வாயு தாக்குதல் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்



ஆப்கானிஸ்தானின் ஹெரட் மாகாணத்தில் நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவியர் மீது நஞ்சு வைத்தது குறித்து அந்நாட்டு பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.


கடந்த இரு வாரங்களில் பல்வேறு பாடசாலைகளில் இருந்தும் சுமார் 600 மாணவியர் குமட்டல், வலி மற்றும் மூச்சுத்திணறல் காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இந்த நோய் அறிகுறிகள் பற்றிய காரணம் கண்டறியப்படாதபோதும் நச்சு வாயு சுவாசிப்பதால் இவ்வாறு ஏற்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

எனினும் எந்த ஒரு மாணவிக்கும் உயிராபத்து ஏற்படவில்லை என்பதோடு அனைவரும் மருத்துவ சோதனைக்கு பின் சிகிச்சை அளிக்கப்பட்டு வீடு திரும்பியுள்ளனர். இந்த சம்பவத்திற்கு எந்தவொரு குழுவும் பொறுப்பேற்கவில்லை.

கடந்த 2012 ஆம் ஆண்டில் ஆப்கான் பெண்கள் பாடசாலைகளில் இடம் பெற்ற நஞ்சூட்டல் சம்பவங்களுக்கு தலிபான்கள் மீது குற்றம் சாட்டப்பட்ட போதும் அதனை அந்த அமைப்பு தொடர்ந்து மறுத்து வருகிறது. எனினும் பெண் கல்விக்கு எதிரானவர்களே இவ்வாறான தாக்குதல்களை நடத்துவதாக அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.(3-7)

## ஏமன் விமானக் குண்டு வீச்சில் 7இந்தியர்களை காணவில்லை

(சனா)



ஏமனில் சவுதி அரேபியாவின் போர் விமானங்களின் குண்டுத் தாக்குதல் காரணமாக, இரண்டு படகுகளில் பயணித்த 20 இந்தியர்களில் 7 பேரை காணவில்லை என்று தகவல் வெளியாகியுள்ளது.

அந்த 20 பேர் யாரென்று அடையாளம் காண முடியவில்லை என்றும் அவர்களில் 13 பேர் உயிருடன் உள்ளதுமட்டும் உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில், ஏமனில் உள்ள தூதரக அதிகாரிகளிடம் தாங்கள் தொடர்பில் உள்ளதாகவும் இந்தியா கூறுகிறது.

20 பேரும் இறந்து விட்டதாக முதலில் செய்தி வெளியாகியிருந்தது.

மேற்கொண்டு உறுதியான தகவல்கள் கிடைத்தவுடன் அவை வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் தலை நகர் சனாவை கைப்பற்றிய கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான தாக்குதல்களை சவுதி தலைமையிலான கூட்டுப்படையினர் நடத்தி வருகின்றனர்.

அவ்வாறான தாக்குதலின்போதே இந்தக் குண்டு வீச்சு நடந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சோமாலியாவின் துறைமுகமான பெர்பெராவிலிருந்து ஏமனில் உள்ள மொக்ஹாவை நோக்கி செங்கடலில் பயணித்துக் கொண்டிருந்த குறித்த இரண்டு படகுகள் மீது செவ்வாய்கிழமையன்று தாக்குதல் நடந்துள்ளதாக தெரியவருகின்றது.

கிளர்ச்சியாளர்களுக்கும் சவுதி தலைமையிலான கூட்டுப் படையினருக்கும் இடையிலான போர் உச்சத்தை அடைந்துள்ள சூழலில், ஏமனில் இது போன்ற சம்பவங்கள் நாள்தோறும் வழக்கமாகியுள்ளன.

இதன் காரணமாகவே, பல சம்பவங்கள் தொடர்பில் உறுதியான தகவல்கள் வெளியாவதில் சிக்கல் உள்ளதாக கூறப்படுகின்றது. (3-7)

## பிரிட்டனின் நீண்டகால அரசியாக இரண்டாவது எலிசபெத் சாதனை

பிரிட்டனின் தற்போதைய மகாராணியான இரண்டாம் எலிசபெத் பிரிட்டனின் அரச தலைவராக நீண்டகாலம் இருந்தவர் என்ற சாதனையை நேற்று முன்தினம் படைத்தார். இதுவரை அவரது பாட்டியாரான விக்டோரியா மகாராணியாரே பிரிட்டனை நீண்டகாலம் ஆட்சி செய்த அரசியாக இருந்தார்.

பிரிட்டிஷ் நேரப்படி நேற்று மாலை ஐந்து முப்பது மணியளவில் தற்போதைய மகாராணியார், 63 வருடங்கள், ஏழு மாதங்கள் ஆட்சிசெய்து முடித்திருந்தார்.

அதாவது, 23,226 நாட்களும் 16 மணி நேரமும் 30 நிமிடங்களும் அவர் ஆட்சி செய்திருந்தார்.

மகாராணியாரின் தந்தையான 6ஆம் ஜோர்ஜ் மன்னர் 1952ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆறாம் திகதி அதிகாலையில் உயிரிழந்தார். அவர் இறந்த நேரம் சரியாகத் தெரியவில்லை என்பதால், எந்த நேரத்தில் மகாராணியார் இந்த சாதனையைப் படைக்கிறார் என்பது தெரியவில்லை.

மகாராணியாரின் இந்த சாதனையை ஒட்டி, லண்டனில் பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. 40 கோடி மக்களைக் கொண்ட சாம்ராஜ்ஜியத்திற்கு விக்டோரியா மகாராணியார் அரசியாக இருந்தார். 89 வயதாகும் எலிசபெத் 13.8 கோடி மக்களைக் கொண்ட அரசின் தலைவியாக இருக்கிறார். (3-7)

## சீனாவில் விஷக் கிழங்கை சமைத்து சாப்பிட்ட 6பேர் பலி

சீனாவில் கொடிய விஷத்தன்மை கொண்ட கிழங்கு சேர்த்து சமைத்த உணவை சாப்பிட்ட 6 பேர் பரிதாபமாக பலியாகினர்.

யுனான் மாகாணம் ஜின்னியு நகரைச் சேர்ந்த ஒருவர், தனது வீட்டிற்கு வந்த விருந்தினர்களுக்கு நேற்றுமுன்தினம்பன்றிஇறைச்சியுடன் கூடிய உணவை பரிமாறினார். அந்த உணவில் மாங்க்ஷூட் வேர் எனப்படும் ஒருவகை கிழங்கை சேர்த்து சமைத்துள்ளனர். இது விஷத் தன்மை வாய்ந்தது என்பதால், உணவை சாப்பிட்ட அனைவரும் சிறிது நேரத்தில் மயங்கி விழுந்துள்ளனர்.

இவர்களில் 6 பேர் பலியான நிலையில், 21 பேருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக அரசின் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, அந்த விஷக்கிழங்கை சாப்பிட வேண்டாம் என கிராம மக்களுக்கு அரசு அறிவுறுத்தியுள்ளது.

மாங்க்ஷூட் வேர் சில நேரங்களில் மருத்துவத்தில் மயக்க மருந்தாகவும், வலி நிவாரணியாகவும் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறுமனவே பொருளாதார பிரச்சினையாக தமிழரின் பிரச்சினையைக் கருத முடியாது

## அமைச்சர் மனோகணேசன் சுட்டிக்காட்டு


(கொழும்பு)

**வெறுமனவே பொருளாதார பிரச்சினை என்று கூறி தமிழர் பிரச்சினையை தீர்த்து வைக்க முடியாது என்று தமிழ் முற்போக்கு கூட்டமைப்பின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு. வைத்தியசாலைகளை அமைத்தல் மற்றும் வடக்கு. கிழக்கில் அபிவிருத்தி என்ற அடிப்படைகளை மேற்கொண்டால். இனப் பிரச்சினையை தீர்த்து விடலாம்என்று வாதிடுகின்றனர்.

எனினும் அதிகாரப் பரவலாக்கல் மூலமே இனப்பிரச்சினையை தீர்க்க முடியும் என்று தாம் திடமாக நம்புவதாக மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

ஹிந்து பத்திரிகைக்கு வழங்கியுள்ள செவ்வியொன்றில் பேச்சுவார்த்தைக் கான அங்கமாக தம்மை அங்கீகரித்தால் தாம் அதற்கு தயாராக முடியும் என்று மனோ கணேசன் தெரிவித் துள்ளார்.



தமது பணிகளை பொறுத்தவரையில் அது குடியியல் சமூகத்துடன் நெருங்கிய தொடர்பை கொண்டிருக்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விளக்கியுள்ளதாக மனோ கணேசன் தெரிவித்தார்.

தமது பிரதான கடமை. நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையாக இருக்கும் என்று குறிப்பிட்ட அவர், அரசசார்பற்ற நிறுவனங்களும் தமது அமைச்சின் கீழ் வருவதாக தெரிவித்துள்ளார். பல்வேறு பிரச்சினைகளால் இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களும் ஒன்றுபடுவதில் சிக்கல்கள் உள்ளன. அவற்றை தாம் களைய முயற்சிக்கப் போவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் உள்ள ஒவ்வொருவரின் சமவுரிமையையும் மத மற்றும் இன அடையாளத்தையும் மறுக்க முடியாது என்று மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 160 | 120 | 140 |
| தக்காளி | 60 | 30 | 60 | 80 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 50 | 60 |
| கோவா | 50 | 60 | 70 | 80 | 80 |
| கரட் | 120 | 100 | 130 | 120 | 80 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 | 30 |
| புடோல் | 40 | 30 | 40 | 50 | 30 |
| வாழைக்காய் | 70 | 60 | 50 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 100 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 | 120 | 100 |
| பாகற்காய் | 120 | 100 | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 50 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 70 | 80 | 100 |
| பயற்றங்காய் | 40 | 30 | 60 | 80 | 40 |
| லீக்ஸ் | 60 | 100 | 80 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 30 | 40 | 40 | 40 |
| கறிமிளகாய் | 100 | 100 | 120 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 120 | 60 | 80 | 100 | 120 |
| போஞ்சி | 150 | 200 | 140 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 40 | 60 | 80 |
| கீரை – 1 பிடி | 80 | 10 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 120 | 100 | 100 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 40 | 40-45 | 50 |
| இராசவள்ளி | 140 | 300 | 170 | — | 250 |
| வெங்காயப்பூ | 200 | 120 | — | 200 | 180 |
| முள்ளங்கி | 30 | 40 | 50 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 25 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 | 20 |

# காணிகளை கொள்ளையிட்டோர் இன்று எம்மைத் தூற்றுகின்றனர்

(கொழும்பு)

மொனராகலை மாவட்டத்தில் காணிகளை கொள்ளையிட்டவர்கள் இன்று எம்மைத் தூற்றுகின்றனர் என அரச நிர்வாக அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார். எல்.ஆர்.சீகாணிகளை ஒரு பேர்சஸ் 50 சதம் என்ற அடிப்படையில்யார்கொள்வனவு செய்தார்கள் என்பது இந்த நாட்டுக்கே தெரியும்.

மொனராகலை பேருந்து தரிப்பிட காணிகள் சுய விருப்பின் அடிப்படையில் பகிரப்பட்டுள்ளது. அரச நிர்வாக அமைச்சு என்பது முழு நாட்டுக்கும் சேவையாற்றக்கூடிய ஓர் அமைச்சாகும்.


மாகாணசபைகளைத் தவிர்ந்த அரச நிர்வாக நடவடிக்கைகள் இந்த அமைச்சின் ஊடாகவே மேற்கொள்ளப்படும்.

முழு நாட்டுக்கும் சேவையாற்றும் அதேவேளை, மொனராகலை மாவட்டத்தையும் அபிவிருத்தி செய்ய முடியும் என அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார மொனராகலையில் நடைபெற்ற மக்கள் ச்ந்திப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 485

Search for people, places and things Nagendram Home

பிரதீபன் சாண்




அன்ரூ சுஜீவன்


ஆவி 1 :- விஷம் குடிச்சி சாக போனேன்.. விஷத்துல கலப்படம்.. பிழைச்சிகிட்டேன்
ஆவி 2 :- அப்புறம் எப்பிடி செத்த ?
ஆவி 1 :- காப்பாத்த மருந்து கொடுத்தாங்க.. மருந்துல கலப்படம் செத்துட்டேன்

ஹார்ட் பெயின்

**மனைவி :** நைட்டு தூக்கத்துல ஏன் சிரிச்சீங்க?
**கணவன் :** கனவுல திரிஷா என்னை கட்டிபிடிக்க வந்தா.
**மனைவி :** அப்பறம் எதுக்கு கத்துனீங்க?
**கணவன் :** கனவுல குறுக்கே நீ வந்துட்டே.
**றுஜகுறு :** ---------??--------
**(அப்ரம் என்ன நடந்திருக்கும்னு கீழ இருக்கிற படமே சொல்லும்.)**



சர்மிளா சர்மி




நிரோசன் மகாலிங்கம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அங்குரார்ப்பண நிகழ்வும் நிர்வாக சபைத் தெரிவும்

யாழ்.மாவட்ட முதியோர் பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது, புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெற்றது.

இதற்கமைய தலைவராக இ.மயில்வாகனம் (கோப்பாய் பிரதேச செயலகம்), உப தலைவராக சேவியர் சர்வானந்தன் (சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), செயலராக திருமதி கைலாசபிள்ளை கமலாதேவி (சங்கானை பிரதேச செயலகம்), உப செயலாளராக விசுவலிங்கம் சிறீரங்கநாதன் (பருத்தித்துறை பிரதேச செயலகம்), பொருளாளராக சுப்பையா பரஞ்சோதி (நல்லூர் பிரதேச செயலகம்) ஆகியோருடன் 9 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-5-134)

## பேருந்திலிருந்து விழுந்த பெண் உயிரிழந்தார்

கடந்த பெப்ரவரி 12 ஆம் திகதி, தனியார் பேருந்து ஒன்றிலிருந்து தூக்கிவீசப்பட்டு, ஆபத்தான நிலையில் கண்டி வைத்திய சாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண், சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் உயிரிழந்தார். சந்திரமாலா (28 வயது) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர், கடந்த பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி மாதாந்த கிளினிக்குக்கு சென்றுவிட்டு வீடு திரும்புவதற்காக, கண்டியிலிருந்து நாவலப்பிட்டி நோக்கி சென்றுக்கொண்டிருந்த பேருந்தில் ஏறியுள்ளார்.

கர்ப்பிணி என்று தெரிந்தும் யாரும் இருக்கைகளை கொடுக்க முன்வராததால் இப்பெண் பஸ்ஸின் மிதிப்பலகைக்கு அருகில் நின்றவாறு பயணித்துள்ளார்.

இந்நிலையில், கம்பளை- நாவலப்பிட்டி வீதி, வளைவில் வைத்து பேருந்திலிருந்து அவர் வெளியே வீசப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், குறித்த கர்ப்பிணிக்கு சச்சிர சிகிச்சையினூடாக குழந்தை வெளியே எடுக்கப்பட்டிருந்தது.

இப்பெண்ணின் தலைப்பகுதியில் பலமாக அடிப்பட்டிருந்தமையால் தொடர்ந்து அவர், தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலே நேற்று உயிரிழுந்துள்ளார். (இ-7)

## இசை நிகழ்ச்சி

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தையொட்டி நடத்தப்படவுள்ள இரதோற்சவ விழா இசை நிகழ்ச்சி இன்று காலை 8.45 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.45 மணிக்கு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் இவ் இசை நிகழ்ச்சியில் நல்லை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரையை வழங்கவுள்ளார்.

தொடர்ந்து காலை 9 மணிக்கு தேவார இசைமணி மதுரை குமார இராமச்சந்திரா வழங்கும் திருமறைக் கச்சேரியும் முற்பகல் 10 மணிக்கு காரைநகர் கிழவன்காடு இசை மன்ற மாணவர்கள் வழங்கும் குழு இசையும் முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் வழங்கும் குழு இசையும் இடம்பெறவுள்ளதோடு முற்பகல் 11 மணிக்கு இசையரங்கும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை இசைக்கச்சேரியும் இடம்பெற்று தொடர்ந்து பிற்பகல் 2 மணி தொடக்கம் 3 மணி வரை கதிர்சுந்தரலிங்கம் வி.ஆர்.மகேந்திரன் ஆகியோர் வழங்கும் பக்திப்பாடல் என்பன இடம்பெறும். (இ-5)

# சட்டமா அதிபருக்கு எதிர்ப்பு

சட்டமா அதிபரின் செயற்பாடுகளுக்கு புரவெசி பலய என்ற அமைப்பு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

அவன்கார்ட் மிதக்கும் ஆயுதக் கப்பல், குமரன் பத்மநாதன் மற்றும் பாரிய ஊழல் மோசடிகள் குறித்து 20 வழக்குகள் தொடர்பில் சட்டமா அதிபர் நடவடிக்கை எடுக்காமை குறித்து இவ்வாறு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

சுமார் 20 மனுக்கள் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவன்கார்ட் மற்றும் குமரன் பத்மநாதன் குறித்த வழக்குகளை விசாரணை செய்ய சட்டமா அதிபர் போதியளவு ஒத்துழைப்பை வழங்கவில்லை என புரவெசி பலய அமைப்பின் பேச்சாளர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபரின் இந்த செயற்பாடுகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஆட்சிபீடம் ஏற்ற அர்ப்பணிப்புக்களைச் செய்த மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அவன்கார்ட் வழக்கு முடிவுறுத்திக் கொள்ள சட்டமா அதிபர் தீர்மானித்த காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

குமரன் பத்மநாதனுக்கு எதிரான வழக்குத் தொடர போதியளவு காரணிகள் கிடையாது என அண்மையில் சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்திருந்தது. குறித்த சம்பவங்கள் தொடர்பில் குற்றவாளிகளை நிரூபித்து தண்டனை பெற்றுக் கொடுக்க போதியளவு ஆதாரங்கள் எம்மிடம் உண்டு.

குற்றவாளிகளை தண்டிப்பதாக அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு நேரத்தை ஒதுக்கித் தருமாறு கோரி, ஜனாதிபதிக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# மைத்திரி-ரணில் கூட்டணியுடன் நான் கடமையாற்ற தயாரில்லை

### சிறிபால கம்லத் தெரிவிப்பு

மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் இணைந்து கடமையாற்றத் தாம் தயாரில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிபால கம்லத் தெரிவித்துள்ளார்.

வரப்பிரசாதங்களை எதிர்பார்த்து நான் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை.

இன்னும் சில மாதங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. அந்தத் தேர்தலுக்கு நாம் ஆயத்தமாக வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலை வெற்றி கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி கடந்த ஜனவரி மாதம் முதல் ஆயத்தமானது. எனினும் எமால் அவ்வாறு ஆயத்தமாக முடிய வில்லை.

எமது வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் விருப்புவாக்குகளை முதனிலைப்படுத்தி செயற்பட்டனர். கட்சியை வெற்றியீட்டச் செய்ய முயற்சிக்கவில்லை.

இந்த இழைக்கப்பட்ட தவறுகளை திருத்திக்கொண்டு, எம்மிட மிருந்து விலகிய மக்களை ஒன்றிணைத்து திட்டமொன்றை நாம் முன்னெடுக்க வேண்டுமென சிறி பால கம்லத் வெலிகந்த பிரதேசத் தில் வைத்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சுப் பதவி சிறிபால கம்லத்திற்கு வழங்கப்பட விருந்தது. நேற்று முன்தினம் நடைபெற்ற பதவிப்பிரமாண நிகழ்வுகளில் கம்லத் பங்கேற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# CSN தொலைக்காட்சி சேவையின் விற்பனை குத்தகைக்குத் தடை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இளைய மகனான யோசித ராஜபக்ஷவுக்கு சொந்தமான சி.எஸ்.என். தொலைக்காட்சி சேவையினை விற்கவும், குத்தகைக்கு விடவும் மற்றும் தற்காலிக பரிமாற்றத்திற்கும், கடுவெல நீதவான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

மேலும், நிதிமோசடி சட்டத்தின் கீழ் சி.எஸ்.என். தொலைக்காட்சியின் இயக்குனர்களை விசாரணை நடத்தவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த தொலைக்காட்சி நிறுவனத்தை, அமைச்சர் தயாகமகேவின் நிறுவனத்திற்கு, விற்பனை செய்ய எடுத்த முயற்சியின் காரணமாகவே இந்த அறிவித்தல் விடப்பட்டுள்ளது. (இ-7)

# தேசியப் பட்டியல் மோசடி அன்றும் இன்றும் எப்படி?

### டளஸ் விளக்கம்

சில்லறை அடிப்படையில் அனறு நடைபெற்ற தேசியப் பட்டியல் மோசடி இன்று மொத்த அடிப்படையில் நடைபெற்று வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழப்பெரும தெரிவித்துள்ளார்.

தேர்தலில் தோல்வியடைந்தவர்கள் வேறும் வழியில் நாடாளுமன்றம் செல்லுவதனை அரசியல் கலாசாரத்தைப் போற்றும் எவரும் அனுமதிக்க மாட்டார்கள்.


வரலாற்று காலம் முதல் தலைவர்களுக்கு இற்ற கயிறு வழங்கும் ஒரு சிலர் இருக்கத்தான் செய்தனர். இதுவும் ஓர் இற்ற கயிறாகும்.

இவ்வாறான பிழையான முன்னுதாரணத்தை 2004 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க வழங்கியிருந்தார்.

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் 20400 வாக்குகளைப் பெற்றுக்கொண்டு பட்டியலில் கடைசியாக இருந்த மேர்வின் சில்வாவை, தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் கொண்டு வந்தார்.

அன்று சில்லறையாக நடை பெற்ற அந்த விடயம் இன்று மொத்த அடிப்படையில் நடைபெறுகின்றது என டளஸ் அழப்பெரும சிங்கள பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)

## நல்லூரில் இன்று



### ஆன்மீக அருளுரை

நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்தையொட்டி யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமியினால் வழங்கப்பட்டு வருகின்ற ஆன்மீக அருளுரை தினமும் இரவு 7.15 மணி தொடக்கம் 8 மணி வரை நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை நல்லூரான் தஞ்சமடி எனும் ஆன்மீக அருளுரை இடம்பெறும். (இ-5)

### அருள்நெறி விழா

நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்தையொட்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திவருகின்ற யாழ்.மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழா தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக நிதி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி.சாந்தி நாவுக்கரசு கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது வரவேற்புரையினை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களக் கணக்காளர் எம்.ஜி.காண்டீபன் நிகழ்த்தவுள்ளார்.

கலை நிகழ்வுகளாக பொலிகை விநாயகர் அறநெறிப்பாடசாலை மாணவன் ஜெ.ஜதுர்சன் பேச்சு, ஏழாலை கருணாகரப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் குழுநடனம், க.திரண்மிகா பேச்சு, மற்றும் மாணவிகள் ம.யதுசா, ஜெ.பவிசாளினி தனி நடனம், துர்க்காதேவி அறநெறிப்பாடசாலை மாணவி யோ.அனுசா பேச்சு, புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் வில்லிசை, ஒல்லுடை அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் நாடகம், பொலிகை அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் பண்ணிசை என்பன இடம்பெறும். (இ-5)

### இசைப்பேருரை

நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்தையொட்டி நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் கந்தபுராணத் தொடர் இசைப் பேருரை தினமும் மாலை 6.45 மணிக்கு நல்லை ஆதீன குரு மூர்த்தி ஆலய மண்டபத்தில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசுகான கதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மாவினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்மைய இன்று வெள்ளிக்கிழமை சூரசங்காரம் எனும் கந்தபுராணத் தொடர் இசைப் பேருரை இடம்பெறும். (இ-5)

### தெய்வீக இசையரங்கு

நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை பாடல் ஏ.கே.கருணாகரன், வயலின் கே.குகபரன், மிருதங்கம் எம்.சிதம்பரநாதன், கெஞ்சிரா பிரம்ம ஸ்ரீ ந.சிவசுந்தர சர்மா, முகர்சிங் ந.சதீஸ்குமார் ஆகியோர் வழங்கும் இசையரங்கு நடைபெறவுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர்-11.09.2015



# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

வழங்கும்

# After AL What Next ?

## உங்களின் கனவும் பெற்றோரின் ஆசைகளும் நிறைவேற

பல்கலைக் கழகமா? உயர்கற்கை நெறியா? புதிய தொழில் வாய்ப்பா?

உங்களின் ஆங்கில அறிவை நனவாக்குவதே ஒரே வழி
அதை மேம்படுத்துவதே எமது நோக்கு

## Spoken English with Grammar — 1 ½ Months

100% பயிற்சி

சர்வதேசத் தரம் கொண்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கி மிகவும் இலகுவான விளக்கங்களுடன் அனைவருக்கும் பயனுள்ள வகையில் கற்பிக்க வகை செய்திருக்கின்றோம். ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே இந் நெறி நடாத்தப்படுகிறது. மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும்ஆங்கிலம் கற்க

100% வெற்றி

## Diploma In English — 2 ½ Months

ஒரு தொழில் தேடுவதாயினும், உயர் கல்வியினைத் தொடருவதாயினும், ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதுள்ளது. இவை யாவையும் கருத்தில் கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கபடுகிறது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

- ★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
- ★ எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
- ★ Excellent Teachers' Panel & Individual Attention
- ★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
- ★ ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்கட்கு தனிப்பட்ட கவனமும், கூடுதல் பயிற்சிகளும் வழங்கப்படும்

| Spoken English with Grammar | | Diploma in English | |
|---|---|---|---|
| ~~Rs.10'000~~ | Rs.7'500 | ~~Rs.14'000~~ | Rs.9'500 |


**Batches Start On**

- 14.09.2015@ 9.00am
- 16.09.2015@ 2.00am
- 19.09.2015@ 9.00pm
- 21.09.2015@ 2.00am
- 24.09.2015@ 9.00am

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS

No.15, Chirambiyady Lane (off Stanley Road),
Jaffna (Near Ariyakulam & Above Sathosa SM)
Tel : 021-2224550, 0777222422,0776555677

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர்- 11.09.2015



நல்லூர்க் கந்தனின் தேர்த்திருவிழா தமிழர்களின் துன்பங்களை தீர்த்து சிறப்புற சுபீட்சத்துடன் வாழ வைக்க எல்லாம் வல்ல முருகப்பெருமானின் நல்லாசிகளை வேண்டி நிற்கின்றோம்.

# சுஜீவா வைத்தியசாலை




## (சுஜீவா தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுர்வேத வைத்தியசாலை)

## வைத்தியசாலை பதிவு இல. ஆயு/ யாப/ மசா/ 63

முன்னைய கிளைகள்: அநுராதபுரம், களத்தாவ தருமபுரம்; நேரியகுளம், ஈரப் பெரி யகுளம், வவுனிக்குளம், காரைநகர். தற்போதைய முகவரி: 109, (நாச்சிமார் கோவிலுக்கு அருகாமை) K.K.S.வீதி, யாழ்ப்பாணம். சேவை நேரம்: காலை 7.00 முதல் நண்பகல் 12.00 வரை, மாலை 3.00 முதல் மாலை 5.00 வரை. வெள்ளிக் கிழமை விடுமுறை நாள்.

வெளிமாவட்ட மக்கள் வருவதற்கு முன் கட்டாயமாக T.P.யில் தொடர்புகொண்டுவரவும்.

T.P : 077 559 4147, 021 568 5333





**Dr.ஜெ.ஜெயலன் (DAM RIMP)**
அரச பதிவு இல. 13461
24ஆவது பரம்பரை



**Dr.ச.ஜெயலன் (DAM RIMP)**
அரச பதிவு இல 12128, 25ஆவது பரம்பரை
(முன்னாள் விரிவுரையாளர் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி)



**Dr.K.O.இராஜரட்ணம் (RIMP)**
அரச பதிவு இல. 6067
24ஆவது பரம்பரை

பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட எமது 23 தலைமுறைகளுக்குரிய ஓலைச்சுவடிகளிலுள்ள வைத்திய நுணுக்கங்கள் எமக்குக் கிடைத்த பல வைத்திய மேதைகளின் (நல்லூர் அரசர்கள்-செகராஜசேகரன், பரராஜசேகரன் உட்பட) கைகண்ட வைத்தியமுறைகள் யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி ஆசான்கள் கற்பித்தவை. அதிசிறந்த சித்த ஆயுர்வேத நூல்களில் உள்ளவை. நவீன முறைகள் மூலமாகவும் எம்மால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் இலங்கை இந்திய சித்த ஆயுர்வேத மருந்துகளில் ஆய்வு செய்யப்பட்டு சிறந்ததென தெரிவு தெரிந்தெடுக்கப்பட்ட பக்கவிளைவற்ற (ISO, GMP முத்திரை பெற்ற நிறுவன தயாரிப்புகள்) இயற்கை மருந்துகள் மூலமாகவும் மாற்ற முடியாதது எனக் கருதி கைவிடப்பட்ட வியாதிகளை (வாதம்,மூட்டு, மாறாசளி, வயிற்றுப்புண், மூலம், பாரிசவாதம், சீறுநீரக பை கற்கள், சருமநோய் (சோறியாசீஸ்) உட்பட உடற்பருமன், தலைமுடி உதிர்தல், நரம்பு வியாதிகள் உட்பட்ட) நீக்குவதில் பெயர்பெற்றதுடன் விசேடமாக குழந்தையின்மைக்கான சிகிச்சையில் நூற்றுக்கணக்கான குழந்தைகளை உருவாக்கிப் பிரபலமடைந்துள்ளது.

இலங்கையில் மாபெரும் வெற்றி கண்ட குழந்தையின்மைக்கான சுதேச வைத்திய சிகிச்சை

ஆங்கில மருந்துகளால் பலவித பக்கவிளைவுகள் உண்டாகும்போது பக்கவிளைவற்ற இயற்கை வைத்தியத்தை விரும்புபவர்களுக்காக

வேறுமனிதர்கள் விந்து, முட்டை, வாடகைத்தாய், சத்திரசிகிச்சை என்பவற்றை விரும்பாதவர்களுக்காக

IVF, ICSI Blasto cyst முதலான சத்திரசிகிச்சைகள் Laprascopy முதலிய பரிசோதனைகளின் வேதனை மனச்சோர்வு என்பவற்றை அனுபவிக்க விரும்பாதவர்களுககாக இந்தியா மற்றும் இலங்கையில் அதிநவீன சிகிச்சைகளால் குணப்படுத்தமுடியாது கைவிடப்பட்டு குழந்தைகளுக்கு ஏங்கும் தம்பதிகளுக்காக

**இங்கு நீக்கப்படும் ஆண், பெண் இருபாலாருக்குமான குறைகள்**


பரம்பரை/ பிறவிக்குறைபாடு/ வயது வந்தும் பருவமடையாமை/ மாதவிடாய் குறித்த காலத்தில் வராமை/ அதிக மற்றும் குறைந்த குருதிப்போக்கு/ வயிற்றுவலி/ இயல்புக்கு மாறான கருப்பை/ சூலக கருப்பை கட்டிகள்/ முட்டை, பலோப்பியன் குழாய், கருப்பைக் கழுத்துக் குறைபாடுகள்/ கொழுப்பு/ நோய்த்தொற்று/ கருச்சிதைவு/ கருக்கலைப்பு மற்றும் அறுவைச்சிகிச்சை என்பவற்றாலுண்டான அழற்சிகள்/ வெள்ளைபடல்/ உளவியல் காரணங்கள்/ ஓமோன் சமச்சீரின்மை/ பெண்ணில் ஆணியல்புகள் (முகஉரோமம்)/ உடலுறவில் நாட்டமின்மை

உடல்சூடு/ உடலுறவில் வலி நோ, எரிவு, விந்து இல்லாமை, எண்ணிக்கை குறைவு, உருவ அமைப்பு பிழைகள், ஓடும் திறன் குறைவு/ நோய்த்தொற்று/ விதையில் தடித்த நாளங்கள் (various vein) சுருங்கிய குழாய்கள்/ நோயெதிர்ப்பு பொருள்/ ஆண்குறி சிறுத்தல்/ விறைப்புத்தன்மை குறைவு/ விரைவான விந்து வெளியேற்றம்/ சிறுநீருடன் அல்லது தன்பாட்டில் விந்து வெளியேறல்

சிகிச்சை முறைகள்

1.பண்டைய நவீன பரிசோதனைகள்மூலம் இரத்தம்,விந்து, முட்டை பிழைகளை சரிப்படுத்தும் எமது பரம்பரை முறைகளையும் பல நாடுகளில் ஆய்வு செய்யப்பட்ட சித்த ஆயுர்வேத மருந்துகள்/ உணவுகள்/ யோகாசனம்/ வர்மபுள்ளி தூண்டல்/ சூரிய நிறமணி, மந்திர சோதிட சிகிச்சைகளை ஒருங்கிணைந்து பாவித்தல் (பரிசோதித்து ஆய்வு செய்து பின் வழங்கல்)

2.சோதனைகளின் பின் இருவருக்கும் பிரச்சினைகளில்லை என்று கூறுகின்றபோதும் வயது செல்கின்றபோதும் விரைவாக குழந்தையுண்டாக்க வேண்டும் என நினைப்பவர்களுக்காக ஆய்வுகளுக்கு அப்பாற்பட்டதும் பல வைத்தியர்களினால் பயன்படுத்தப்பட்டதும் குழந்தை இல்லையென்றால் ஆணுக்கும் பெண்ணுக்கும் வழங்குமாறு ஓலைச்சுவடிகளில் எழுதியுள்ளதுமான எமது பரம்பரை மருந்துகளை நுணுக்கங்களைப் பாவித்தல் குறிப்பிடத்தக்கவை.




## நினைவுகளை மீட்டல்

புதிய வைத்தியசாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுகளின் போது










நாச்சிமார் கோவில் அருகாமையில் அமைக்கப்பட்ட எமது புதிய வைத்திய சாலை கட்டட கிருஹப் பிரவேச நிகழ்வுகளின் போது.
























வைத்தியர்களது பல நிகழ்வுகளின் போது.

"எமது சுதேச மருத்துவம் சிவபெருமானால் உருவாக்கப்பட்டது. இதற்கு சாதி மத, இன, கட்சி, பேதம் கிடையாது. எல்லோரும் சமம். எமது வைத்தியம் எல்லோருக்கும் பொதுவானது. எமது வைத்தியத்திற்கு முற்காலத்தில் அரசர்கள் ஆதரவு தந்தார்கள். அதேபோல் இக்காலத்திலும் சகல மதத்தலைவர்களும், மக்களும், அரசியலாளர்களும் ஆதரவு தரவேண்டும்" இந்த வழியில் இன்றைய நல்லூரான் பெருவிழாவில் சுதேச மருத்துவம் வளர பாடுபடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உன் காவல் வேண்டுமையா

தேரேறி வரும்காட்சி தேனாக இனிக்குதையா
பாரோரின் கரங்கள் யாவும் சிரங்களிலே குவியுதையா
தீராத தம் குறைகள் வாய் விட்டுக் கொட்டுதையா
சீராகவில்லை ஐயா சிதறிய எங்கள் வாழ்வு
ஏராளமானோர் வடம்பிடித்தே இழுக்கின்றோம் இங்கே
பாராயோ பாவிகளின் பயம் தீர்ப்பாய் வேல் முருகா!
நேராக நின்றிடவோ உன்காவல் வேண்டுமையா
தாராளமாக தரணியிலே வாழ நல்வழி தாருமையா

மானந்தன்,அல்வாய்.

# Vamadeva Memorial Tennis Court "Entrance Arcade"










தியாகி அறக்கொடை நிறுவனத்தின் (TCT)முப்பது இலட்சம் ரூபா நிதிப்பங்களிப் புடன் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் (J/ St.Patrick's College) அமைக்கப்பட்ட வாமதேவா ஞாபகார்த்த ரெனிஸ் விளையாட்டரங்கு மற்றும் பாடசாலை நுழைவாயில் ஆகியன நேற்று 10.09.2015 அன்று யாழ்.மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய பேரருட்கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் TCT நிறுவனத்தின் ஸ்தாபகர் மற்றும் குடும்பத்தினர் , TCT பணியாளர்கள் மற்றும் விருந்தினர்கள் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது எடுக்கப்பட்ட படங்களையே காண்கிறீர்கள்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர்- 11.09.2015




# தட்ஷா

அழகுக் கலையகமும் பயிற்சி நிலையமும்




மணப்பெண் அலங்காரம்
மணப்பெண்களுக்கான முக ஒப்பனைகள், அனைத்து வகையான முக ஒப்பனைகள், சிறுவர் மகளிருக்கான ஹெயர் கட்ஸ் & ஒயில் மசாஜ், மெனிகியூர், பெடிகியூர் & நக அலங்காரம் (Nail Arts), பேர்மிங் (Perming), ஸ்ரெயிற்னிங் (Strightening), றீ-பொண்டிங் (Re-Bonding) & கலரிங் (Colouring)

Specil Bridal Packages & Wedding packages are Available

இல. 84, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0212229713, 0773383643 E-Mail:thadsha83@yahoo.com







முருகனே!
முத்துக் குமரனே
வள்ளி தெய்வானையுடன்
தேரேறி வந்து வினை
போக்க வா! வா!! வா!!!


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்
இல.342, 344, 346 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



# ANGEL INTERNATIONAL SCHOOL

## A School of Excellence

Mather's Lane
Maniapy

021 225 5628
www.aismanipay.info



2015/2016 புதிய கல்வியாண்டிற்கான :

- 3+ மாணவர்களிற்கான அனுமதிகள்
- Autism பிள்ளைகளிற்கான அனுமதிகள்
- உள்நாட்டு வெளிநாட்டு மாணவர்களிற்கு ஏனைய வகுப்புக்களிற்கான மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் தகுதிகாண் பரீட்சையின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.
- இரண்டாம் நிலைக் கற்கை நெறிகளிற்கும் புதியபிரிவுகள் ஆரம்பமாகின்றன.

1) AAT
2) Teacher Training
3) Special English Course
4) Auto CAD
5) Media Studies
6) Hospitality&Tourism

விண்ணப்பம் ஏற்கப்படும் நாள் :
15 September 2015

* அனைத்து வகுப்புக்களும் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கப்படுகின்றன. Gr 3 ற்கு மேற்பட்ட வகுப்புகளிற்கு தமிழ், சிங்களம், ஜேர்மன் ஆகிய மொழிகள் இரண்டாம் மொழியாக கற்பிக்கப்படுகின்றன.

விண்ணப்ப படிவங்களை பெற்றுக்கொள்வதற்கு :
ஏஞ்சல் சர்வதேச பாடசாலை - சாவகச்சேரி
கச்சாய் வீதி, சாவகச்சேரி. 021 225 5628.

ஏஞ்சல் சர்வதேச பாடசாலை - யாழ்ப்பாணம்
இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். 021 222 4118.

ஏஞ்சல் சர்வதேச பாடசாலை - மானிப்பாய்
மாதர்ஸ் வீதி, மானிப்பாய். 021 225 5628.



# ஸ்ரீ சிவாஞ்சனா ஜுவல்லறி

Sri Sivanchchuna Jewellery



தங்கப்பவுன் நகை வியாபாரம்
Manufacturers Gold jewels
149 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
Tel: 021 222 9227


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PEARSON
University of WOLVERHAMPTON
London South Bank University

# A/L இன் பின்னர் சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்

•Business Management
•Marketing
•HRM

BTEC HND
Leading to BA (Hons) from the UK Universities

Quantity Surveying

BTEC HND
Leading to BSc (Hons) from the UK Universities

Bio-Medical Science

BTEC HND
Leading to BSc (Hons) from the UK Universities

Civil Engineering

BTEC HND
Leading to BEng/BSc (Hons) from the UK Universities

Telecom Engineering

BTEC HND
Leading to BEng (Hons) from the UK Universities

Computing

BTEC HND
Leading to BSc (Hons) from the UK Universities

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

BCAS JAFFNA CAMPUS
16, Point pedro Road,
Jaffna.
Hotline: 077 710 2131

16 YEARS

Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by LMD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரேறும் அலங்காரக் கந்தனுக்கு அரோகரா!



LITRO GAS

## நல்லூர் உற்சவகால Litro Gas விலை தள்ளுபடி

ஆகஸ்ட் 17ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 17 ஆம் திகதி வரையான உற்சவ காலத்தில் தாங்கள் கொள்வனவு செய்யும் 12.5 Kg லிற்றோ நீல நிற வெற்று சிலிண்டர் 3400 ரூபாய் மட்டுமே. அத்துடன் 5 Kg லிற்றோ நீல நிற வெற்று சிலிண்டர் 2250 ரூபாய் என்பதையும் வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.




வாடிக்கையாளர் அனைவருக்கும்

## S.V.முருகேசு லிற்றோ காஸ்

நிறுவனத்தின் நல்லூர் கந்தன் அருள்பாலிக்க வேண்டி நிற்கின்றோம்

~~4080~~ /=
விசேட விலை
3400 /=

~~2585~~ /=
விசேட விலை
2250/=




இச்சலுகையினை தங்களுக்கு அருகில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட லிற்றோ காஸ் முகவரிடம் பெற்றுக் கொள்ளலாம். மேலும் விசேடமாக இந்த உற்சவ காலத்தில்

**S.V.முருகேசு** இல.106, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் அமைந்துள்ள எமது லிற்றோ காஸ் விநியோக நிறுவனத்திலும் நேரடியாகப் பெற்றுக் கொள்ள முடியும்

தொடர்புகளுக்கு : 021 4925830
078 5646505

கையிருப்பு உள்ளவரை மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அமைதியான நதியினிலே ஓடம் ஓடும்
அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்.
- கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சர்வதேச விசாரணை ஒரு கற்பனை நாடகம்-2

**தமிழ் மகன் 2:**முடிந்தது என்றால் முடிந்தது. முடியவில்லை என்றால் முடியவில்லை.

**தமிழ் மகன் 1:**வடக்கு மாகாண சபையில் சர்வதேச விசாரணையை வலியுறுத்திக் கொண்டு வந்த தீர்மானம்?

**தமிழ் மகன்2:**ஆடி அடங்கும் வாழ்க்கையடா, ஆறடி நிலமே நமக்குச் சொந்தமடா...

*(கோரஸ்)* தகிட... தகிட... தகிட...

வேண்டும்... வேண்டும்... சர்வதேச விசாரணை வேண்டும்... வேண்டும்... வேண்டும்... சர்வதேச விசாரணை வேண்டும்...

**இரா.ச:**மந்திரா! என்ன கோசம் அங்கே?

**மந்திரா:**சர்வதேச விசாரணையை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டமாம்.

**இரா.ச:**அட, நாசமறுப்பு!

**மந்திரா:**ஐயா! உங்கட கடைசி ஆசை நிறைவேறிற்று. அமிர் மாதிரி வரவேணும் எண்டு நினைச்சியள். அது மாதிரி ஆக்கிப் போட்டன். இனி எந்தப் போராட்டம் என்றாலும் எங்களுக்கு என்ன?

**இரா.ச:**மந்திரா! அப்படிச் சொல்லாதே. அடுத்த தேர்தலிலும் நான் வெல்லவேணும்.

**மந்திரா:**அப்ப நாங்கள் எப்ப உங்கட இடத்துக்கு வாறது? இப்படியே தேர்தலில் போட்டியிடப்போறியளோ!

**இரா.ச:**மந்திரா! எனக்குப் பயமாய் இருக்கு. சனம் எல்லாம் கையெழுத்துப் போடுவதில கடும் ஆர்வம் காட்டுகினம். எங்கட எதிர்காலம்...?

**மந்திரா:**இதுக்கேன் ஐயா! பயப்படுகிறியள். உங்களுக்குத் தெரியாத சிங்க வாகனமோ! காளி ஆத்தாவோ! கனவோ! ஒன்றை எடுத்து விடுங்களேன்.

**இரா.ச:**ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் ஊ தினம் நடத்திய போது நான் சிங்கக் கொடியைத் தூக்கிப் பிடித்தனான். அப்பவே எனக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி தரலாம் என்று ரணில் என்ர காதில சொன்னவர். சொன்னமாதிரி அந்தாள் செய்து போட்டுது.

**மந்திரா:**நீங்கள் சிங்கக் கொடி தூக்கியதை பலர் விமர்சித்தாலும் திருகோணமலையில் இருக்கின்ற காளியை முன்னிறுத்தி சிங்கக் கொடி–சிங்க வாகனம் எனக்குப் பிடிக்கும் என்று சொல்லி தப்பித்துக் கொண்டீர்கள். எங்கட சனங்களும் நீங்கள் சிங்கக் கொடி ஏற்றியபோது–ரணிலோடு கூட்டு வைத்தபோது ஓரளவுக்கென்றாலும் சந்தேகம் கொண்டிருக்க வேண்டும். ஆனால் எங்களுடைய தமிழ்ச் சனங்கள் நம்பினால் நம்பினதுதான்.

**இரா.ச:**ஹ... ஹ... மந்திரா நான் சிங்கக் கொடி பிடித்ததை சொல்லிக் காட்டுகிறீரா அல்லது குத்திக் காட்டுகிறீரா? எதுவாக இருந்தாலும் உன்னுடைய ஞாபக சக்தி யாருக்கு வரும்? எனினும் கையெழுத்துப் போராட்டம்...பயமாக இருக்கு.

**மந்திரா:**எனக்கும் பயமாகத்தான் இருக்கிறது. நீங்கள் தாளத்தை மாற்றிப்போடுங்கள்.

**இரா.ச:**சர்வதேச விசாரணை அவசியம்... உள்ளூர் விசாரணையில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. நாங்கள் சர்வதேச விசாரணையை வலி யுறுத்துகிறோம்.

**மந்திரா:**சபாஷ்... இது போதும் ஐயா! அடுத்து தேர்தலிலும் நாங்கள்தான்...

*(நீங்கள் இதுவரை நேரமும் பார்த்து மகிழ்ந்தது சர்வதேச விசாரணை நாடகம்)*

**பார்வையாளர்கள்:**நல்ல நாடகம் இரா.ச நடிப்பு பிரமாதம். மந்திரன் மிகத் திறம். இனியும் நாங்கள் ஹவுஸுக்குத்தான் புள்ளடி போடுவம். ஏனென்றால் அவர்கள் தானே எங்களை ஏமாற்றுவினம். அப்ப தானே ஏமாறுகிற எங்கட தலைவிதி நடந்தாகும். நல்லம் நல்லம்.

## இந்திய இளைஞர் தங்கத்துடன் கைது

இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் தங்கம் கடத்த முற்பட்ட இந்திய இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக விமான நிலைய சுங்கத் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிடுகையில்,

சென்னை விமான நிலையத்தில் இருந்து கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்திருந்த விமானம் ஒன்றிலேயே குறித்த இளைஞர் பயணம் செய்துள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடமிருந்து 300 கிராம் நிறையுடைய 3 தங்க கட்டிகளை கைப்பற்றியதாகவும், இவற்றின் பெறுமதி 15 இலட்சம் என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட இளைஞர் 21 வயதுடையவர் என்பது விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

## நல்லூரானுக்கு இன்று தேர்

அருளை வாரி வழங்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் கடந்த 19.08. 2015 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகியது.

தினமும் பகல் இரவுத் திருவிழாக்கள் உரிய நேரத்தில் வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது. இவ்வாலயத்தின் சிறப்புக்களில் நேரத்திற்குப் பூசை திருவிழாக்கள் நடைபெறுவது சிறப்பம்சமாகும்.

கடந்த 04ஆம் திகதி கார்த்திகைத் திருவிழாவின்போது ஆலயத்தின் வடக்கு வாசலில் புதிதாகக் கட்டப்பட்ட கோபுரம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. ஒவ்வொரு வருடத்திலும் ஒவ்வொரு புது வேலைகள் நடைபெற்று வருகின்றமை பெருமைக்குரியது.

இவ்வருடத்துக்கான புதிய வேலையாக குபேரவாசல் கோபுரக் கும்பாபிஷேகத்தைக் குறிப்பிடலாம்.

ஆலயக் கொடியேற்றத்துக்கு முன்பதாகவே ஆலயச்சூழல் தெய்வீகச் சூழலாகப் பக்திமயமாகக் காணப்படுகின்றது.

நன்கு திட்டமிடப் பட்ட வீதி ஒழுங்குகள் அடியார்கள் வழிபடக் கூடிய வகையில் ஒழுங்கமைப்புக்கள் செய்யப்பட்டுள்ளன.

ஆலயத்தில் தினமும் நடைபெறும் பூசைகள் பகல் இரவு திருவிழாக்கள் உரிய நேரத்தில் நடைபெறுவதுடன் இரவுத் திருவிழாவைத் தொடர்ந்து நடைபெறும் பள்ளியறைப் பூசை மிகவும் பக்திமயமானது.

வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர்க் கந்தப் பெருமான் 24ஆம் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை காலையில் தேரேறி வீதி வலம் வரும் காட்சி அற்புதமானதாக இருக்கும்.

தேர்த்திருவிழாவன்று மிகக் கூடுதலான அடியார்கள் ஆலயத்துக்கு வருவார்கள். அங்கப்பிரதட்டை செய்வோர், காவடி எடுப்போர், அடி அளப்போர் எனத் தமது நேர்த்திகளை நிறைவேற்றுவோர் ஆலயத்தில் நிறைவேற்றுவர். இது தேர்த்திருவிழா மஹோற்சவத்தில் முக்கிய நாளாக விளங்குகின்றது.

வருடந்தோறும் வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் வெளியீடு இம்முறையும் வெளியிடப்பட்டுள்ளது. நல்லைக்குமரன் தேரேறி வலம்வரும் காட்சி மகத்தான கண்கொள்ளாக் காட்சியாகும். தேர்த் திருவிழாவைக் காண இலங்கையில் பல பகுதிகளிலிருந்தும் அடியார்கள் வருவார்கள். ஆலயச் சுற்றாடலில் தினமும் இசை நிகழ்ச்சிகள் இடம் பெற்று வருகின்றன. தேர்த்திருவிழாவின் முதல் நாள் சப்பரத் திருவிழாவும் தேர்த்திருவிழாவின் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடை பெறும்.

25ஆவது திருவிழாவான தீர்த்தத் திருவிழாவன்று மாலை நடைபெறும் கொடியிறக்க நிகழ்வுடன் வருடாந்த மஹோற்சவம் நிறைவடையும். நாமும் நல்லைக் கந்தனை மஹோற்சவத்தில் வழிபட்டு அருள்பெறுவோமாக.

**சைவப்புலவர்**
**சுவாமிநாதப்பிள்ளை**
**தேவமனோகரன்**

## கண்காட்சியை பார்வையிட்டு விடைகளை அறியுங்கள்

இதுவரை இடம்பெற்ற 12 வினாக்களுக்கான விடைகளை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் நடைபெறும் **மனிதனாக வாழ்வோம்** கண்காட்சியை பார்வையிடுவதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

❖ இவ் வினாவிடைப்போட்டியில் 8-28 வயது வரை உள்ளவர்கள் பங்குபற்றலாம்.

❖ இவ் வினாவிடைப்போட்டியில் இடம்பெறும் வினாக்களுக்கான விடைகள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் புகைப்படங்கள் மற்றும் ஓவியங்கள் ஆகும்.

❖ எழுதிய விடைகள் செப்ரெம்பர் 13 திகதி ஞாயிற்றுக்கிழமை உரியவர்களால்

பிரிவு I - (8 - 10 வயது) காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரையிலும் பிரிவு II - (11 - 13 வயது) முற்பகல் 10 மணி தொடக்கம் 11.00 மணி வரையிலும் பிரிவு III - (14 - 16 வயது) முற்பகல் 11.00 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையிலும் பிரிவு IV - (17 - 28 வயது) நண்பகல் 12.00 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரையிலும் இல.9, செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். அதேவேளை மேற்குறித்த நேர ஒழுங்கின்படி குறித்த பிரிவுகளுக்கான நேர்காணலும் அன்றைய தினமே நடைபெறும். (இ-7)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

**ஆடை விடயத்தில் கவனம்**

★ விருந்தினர் வீட்டில் நுழைந்தால், மனங்கோணாமல் மகிழ்ச்சி அடையுங்கள். ஏனென்றால் அவர்களுடைய உணவை அவர்களே கொண்டு வருகிறார்கள்.

★ பெருமைக்காக ஆடை அணிகின்றவருக்கு வாழ்வில் வறுமை உண்டாகும்.

★ எல்லோரும் ஒன்று கூடி உண்ணுங்கள். பிரிந்து விடாதீர்கள். ஒன்றுகூடி இருப்பதில் தான் "பரகத்" இருக்கிறது.

★ நீங்கள் இரவில் பட்டினியாக இருக்காதீர்கள். பட்டினி இருப்பதால் விரைவில் உங்களுக்கு முதுமை தட்டிவிடும்.

★ உணவுப் பண்டங்களை பதுக்காமல் மக்கள் தேவைக்கு விற்பனை செய்யும் வியாபாரி அல்லாஹ்வின் பேரருளைப் பெற்றவராவார்.

★ நாவு நேர்மையாக இருக்குமானால் ஒருவனுடைய இதயம் நேர்மையான வழியில் செல்லும்.

★ பழித்துரைத்தல், ஒழுக்கம் கெட்ட [illegible] பேச்சுக்கள் ஆகிய இரண்டும் நயவஞ்சகத்தின் இரு கிளைகளாகும்.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நம்பிக்கையின்மை (சந்தேகிக்கும் தன்மை)

எதிலும் நம்பிக்கையில்லாமல் இருந்துகொண்டு அவ்வாறு தான் இருப்பதை அறியாமல் இருப்பதுதான் அறியாமை எனப்படும். நீங்கள் எதிலும் நம்பிக்கை இல்லாதவர் என்று நினைத்தால் நீங்கள் நம்பிக்கை இல்லாதவர் அல்ல! உங்களுக்கும் அப்பால் ஏதோவொன்று இருக்கிறது என்ற தடயம் (உளவு) உங்களுக்குக்கிடைத்துள்ளது. ஆகவே உண்மையில் நீங்கள் நம்பிக்கையில்லாதவராக உள்ளபோது நீங்கள் நம்பிக்கை உள்ளவரா, இல்லாதவரா? என்பது பற்றி ஒருபோதும் அறிந்து கொள்ள முடியாது. எதிலும் நம்பிக்கையில்லாதவர்கள் ஏனைய சாத்தியக் கூறுகள் அனைத்தையும் ஏற்காத ஒரு உதாரணத்தில் சிக்கிக்கொள்கிறார்கள். ஆனால் இந்தப் படைப்பானது எல்லாச் சாத்தியக்கூறுகளையும் உள்ளடக்கியது. நீங்கள் இந்த உதாரணம் மேற்கொள் மாற்றமடைகிறது என்பதைப் புரிந்து கொள்ளும் போது எதையும் நம்பாததன்மை வீழ்ந்து விடுகிறது.


உண்மையான ஒரு விஞ்ஞானி நம்பிக்கையில்லாதவராக என்றும் இருக்க முடியாது. ஏனெனில் நம்பிக்கையின்மை, நாம் இதுவரை அறியாத வாழ்வின் பகுதிகளை நுட்பமாக ஆராயவிடாது நம்பாததன்மை என்பது எல்லாம் எனக்குத் தெரியும் என்ற மனப்போக்கு. இது அறிவியல்பூர்வமான மனநிலை அல்ல. ஞானத்தால் நம்பிக்கையின்மை ஓட்டப்படுகிறது. ஒருவரின் நம்பாத போக்கை அங்கீகரித்து அவருடன் விவாதம்புரிய முயற்சி செய்யாதீர்கள். விவாதம், நம்பாததனத்திற்கு வலிமையையே அளிக் கிறது. சுதந்திரத்தை இழந்து விடுவோமா என்ற ஒருவரின் அச்சம், அதிக எதிர்ப் புக்களை ஏற்படுத்தி, நம்பாததனத்தை நாளும் அதிகரிக்கச் செய்கிறது.


ஒவ்வொரு மனிதனிடத்தும் உள்ளாழத்தில் நம்பிக்கையும் அன்பும் இருக்கிறது. நம்பிக்கையின்மை ஒரு மெல்லிய பாலம்தான். "இவர் நம்பிக்கை இல்லாதவர்" என்று நீங்கள் மனதில் நினைத்தாலே அவருடைய நம்பாத் தன்மைக்கு நீங்கள் வலிமையைத் தருகின்றீர்கள். உங்கள் மௌனமும் உங்கள் இதயத்திலிருந்து மலரும் புன்னகையும் எந்த வகையான நம்பாத குணத்தையும் ஓட்டிவிடும். அதை உடைத்தெறிய மௌனத்தை விடச் சிறந்த வழிவேறு எதுவுமில்லை. மௌனம் என்பது தரமான உயர்ந்த மெய்யறிவு. உதடுகளை இறுக மூடிக் கொண்டிருப்பது மாத்திரம் மட்டுமல்ல.

வரையறைகளை வகுத்துக்கொண்டு அதற்குள் சுழன்று கொண்டு இருப்பவர்களுக்குத்தான் நம்பிக்கையின்மை வரும். குழந்தைகளிடம் நம்பிக்கையின்மை இல்லை. அவர்கள் தங்களுக்கே உரிய கற்பனையுலகில் சாத்தியக் கூறுகள் நிறைந்த அந்தக்கற்பனை உலகில் வாழ்கிறார்கள். கள்ளங்கபட மற்ற தன்மை, ஆனந்தம், அழகு, அன்புமிகுந்த உலகம், குழந்தைகளின் உலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் சென்.ஜோசப்பை வீழ்த்தி வல்வை ஆதிசக்தி அபார வெற்றி




நெற்கொழு கழுகுகள் வி.க நடத்தும் வடமாகாண ரீதியான உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் சுப்பர் 8 சுற்றின் லீக் ஆட்டங்கள் மின் ஒளியில் இடம்பெறுகின்றது. சுப்பர் 8 சுற்றின் முதல் நாள் (08.09.2015) நடைபெற்ற முதலாவது போட்டியில்மன்னார் கில்லரி வி.க எதிர்த்து மயிலுங்காடு ஞான முருகன் வி.க மோதியது.

90 நிமிட போட்டியாக இடம்பெற்ற போட்டியில் இரு அணிகளும் வெற்றிபெற கோலினை பெற வேண்டும் என பல முயற்சிகளை மேற்கொண்ட போதும் இரு அணிகளுக்கும் கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்தினை கோலாக மாற்றாது ரசிகர்களுக்கு ஏமாற்றம் அளித்தனர். ஆட்ட நேர முடிவில் போட்டி சமநிலையில் நிறைவுபெற்றது. போட்டியின் சிறந்த ஆட்ட நாயகனாக கில்லரி கோல் காப்பாளர் சரத்பாபு தெரிவு செய்யப்பட்டு வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பதக்கம் அணிவிக்க அணிகளுக்கான பரிசுத் தொகையினை மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் வழங்கி கௌரவித்தார்.

இரண்டாவது போட்டியாக இடம்பெற்ற வல்வெட்டித்துறை ஆதிசக்தி வி.க எதிர் மன்னார் சென். ஜோசப் வி.க இடையிலான போட்டியில் ஆட்டத்தின் 10 ஆவது நிமிடத்தில் சென்.ஜோசப் வி.க நட்சத்திர வீரர் டிங்கோணி ஒரு கோலினை அடிக்க மிக விரைவாக செயற்பட்ட ஆதிசக்தி வீரர் பிரசாந்தன் 43 ஆவது நமிடத்தில் தலையால் முட்டி கோலின்னை பெற்றதன் மூலம் மீண்டும் சமநிலைப்படுத்தினார்.

தொடர்ந்தும் தனது உற்சாக ஆட்டத்தின் மூலம் இரண்டாம் பாதி ஆட்டத்தின் முதல் நிமிடத்தில் தலையால் முட்டி கோலினை பெற்று ரசிகர்களை பரவசப்படுத்தினார். சக வீரர் கௌரிதாசன் 19 ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோலினை பெற ஆட்ட நேர முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் ஆதிசக்தி வெற்றி பெற்றது. இப் போட்டியின் ஆட்ட நாயகனாக பிரசாந்தன் தெரிவு செய்யப்பட்டு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் பதக்கம் அணிவித்ததுடன் அணிக்கான பரிசினையும் வழங்கிவைத்தார். (க)

## இன்றைய போட்டிகள்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ்.மாவட்ட ரீதியில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில்

இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகமும்

நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (க)

SPORTS
விளையாட்டுச் செய்திகள்



பொலிகண்டி பாரதி வி.கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப்போட்டியில் நவஜீவன்ஸ் வி.கழகம் விண்மீன் வி.கழகத்தினை 4:2 என்ற ரீதியில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது. அவ் அணியினை படத்தில் காணலாம்.

## மரதன் ஓட்டப் போட்டி

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினால் எதிர்வரும் 15.09.2015 ஆம் திகதி காலை 6.00 மணிக்கு மரதன் ஓட்ட போட்டி நடத்தப்படவுள்ளது.

இம்மரதன்ஓட்ட போட்டியில்கலந்து கொள்வோர் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் பெயர் விபரங்களினை சமர்ப்பித்து போட்டியில் கலந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 16 வயதிற்கு மேற்பட்ட வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டுமே பங்குபற்றலாம் என்பதுடன்15.09.2015 ஆம்திகதி காலை வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் உடற்தகுதி பரிசோதனை மேற்கொண்ட பின்னரே போட்டியில் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படும் எனவும் பிரதேச சபையின் செயலளார் திருமதி சுகந்தி கிசோர் தெரிவித்துள்ளார். (க)

# ஞான முருகனை வீழ்த்தி யங்கம்பன்ஸ் அபார வெற்றி





ரதன்,பிராஷ்,தர்சன்,ஆகியோரின் அபாரமான ஆட்டம் மூலம் ஞான முருகனை வீழ்த்தியது கம்பர் யங் கம்பன்ஸ் அணி.

கடந்த ஞாயிற்றுக்கிழமை உடற்கல்வி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்ட கால் இறுதிப் போட்டியில் ஞான முருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் கம்பர் மலையங்கமபன்ஸ் அணி 4:1 என்ற ரீதியில் அபார வெற்றி பெற்றது.அவ் அணி சார்பாக ரதன் 2 கோலினையும் பிரகாஷ், தர்சன் தலா ஒரு கோலினையும் பெற றுக் கொண்டனர். (க)

## பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டி -2015



இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையிலான 2015ஆம் ஆண்டுக்கான தடகளப் போட்டியானது ஓகஸ்ட் மாதம் 29, 30 ஆம் திகதிகளில் மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது. இதில் 14 பல்கலைக்கழகங்கள பங்குபற்றியிருந்தன.

இப்போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தடகள அணியின் பெண்கள் பிரிவில் எஸ். தாரணி ஈட்டி எறிதல் போட்டியில் முதலாம் இடததையும், தட்டெறிதல் போட்டியில் 3 ஆம் இடத்தையும், ஜி.துஸ்யந்தி உயரம் பாய்தல் போட்டியில் 2ஆம் இடத்தையும், ஆர்.துஸ்யந்தி 800மீ ஓட்டப்போட்டியில் 3 ஆம் இடத்தையும், ஆண்கள் பிரிவில் டி. எல். ஜே. என். லியனகே ஈட்டி எறிதல் போட்டியில் 2ஆம் இடத்தையும், தட்டெறிதல் போட்டியில் 3 ஆம் இடத்தையும், ஏ.பிரசன்னா தட்டெறிதல் போட்டியில் 2ஆம் இடத்தையும், கே. கஜீவன் உயரம் பாய்தல் போட்டியில் 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

யாழ் பல்கலைக்கழக தடகள ஆண்கள், பெண்கள் அணிகளின் பயிற்றுனராக செல்வி.இ.அருளம்பலம் கடமையாற்றினார். யாழ்.பல்கலைகழக தடகள ஆண்கள் அணியின் தலைவராக ஏ. பிரசன்னாவும், தடகள பெணகள் அணியின் தலைவியாக எஸ். தாரணியும் செயற்பட்டிருந்தனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில்...

நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள 23 மத்திய நிலையங்களில் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை வினாத்தாள்கள் திருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய வினாத்தாள் திருத்தும் நடவடிக்கைகளுக்காக 08 பாடசாலைகள் முழுமையாக பயன்படுத்தப்படுவதாகவும் 15 பாடசாலைகள் பகுதி அளவில் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று இலட்சத்து 40 ஆயிரத்து தொளாயிரத்து 26 பரீட்சார்த்திகள் இம்முறை ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## வெலிக்கடையில்...

மொன்று நடைபெற்றுள்ளது.

செப்டம்பர் 10ஆம் திகதி வருடந்தோறும் சர்வதேச சிறைக் கைதிகள் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதனை முன்னிட்டு காணாமல் போனவர்களுக்கான கூட்டமைப்பு, அரசியல் கைதிகளின் விடுதலைக்கான அமைப்பு மற்றும் சிறைக் கைதிகளின் உரிமைகளுக்கான அமைப்பு என்பன இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்திருந்தன.

ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டு, அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வலியுறுத்தும் பதாகைகளை தூக்கிப் பிடித்து கோசங்களும் எழுப்பினர்.

அத்துடன் இலங்கையில் காணாமல் போனவர்களை கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-11)

## நல்லூர் ஆலய...

வம் எதிர்வரும் 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

நேற்றைய உற்சவம் வரை புலம்பெயர் தமிழ் மக்கள் உட்பட நாடு முழுவதிலிருந்தும் சுமார் 3 இலட்சம் பேர் வரையில் நல்லூர் கந்தனை தரிசித்துள்ளனர்.

நாளையதினம் (இன்று) தேர்த்திருவிழா நடைபெறவுள்ள நிலையில் கடந்த உற்சவ தினங்களிலும் பார்க்க சனத்தொகை அதிகரித்ததாக காணப்படும்.

இதற்கு ஏற்ப அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில், ஆலய சுற்றுப்புறத்தில் சுமார் 150 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிவில் உடையில் 24 மணிநேர பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இது தவிர வீதிப்பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நெரிசல்களை கட்டுப்படுத்துவதற்கும் விசேட பொலிஸ் படையணி யொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் சுமார் 350 பொலிஸ் உத்தியோகத்தர்களும் வெளிமாவட்டங்களிலிருந்து 300 பொலிஸ் உத்தியோகத்தர்களும் மேலதிகமாக கடமைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஆலயத்துக்கு வருபவர்கள் தமது வீடுகளின் பாதுகாப்பினையும் முற்றுமுழுதாக உறுதிப்படுத்தி வருகை தருமாறும் யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார். (எ-4)

## நீதிக்கான தேடல்...

ணப்படம் அரை மணி நேரம் கொண்டதாக அமைந்துள்ளது.

போர்க்குற்ற ஆதாரங்களையும், பாதிக்கப்பட்டவர்களின் குரல்களையும் கொண்டதாக தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆவணப்படம் சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணப்படம் தமிழ், சிங்களம், ஹிந்தி மற்றும் பிரெஞ்சு மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு அடுத்த சில நாட்களில் வெளியிடப்படவுள்ளது.

இந்த ஆவணப்படத்தை ஜெனிவா உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் திரையிடுவதற்கான நடவடிக்கைகளை கலும் மக்ரே மேற்கொண்டு வருகின்றார்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்களை சனல் 4 தொலைக்காட்சி வாயிலாக சர்வதேச சமூகத்துக்கு கலும் மக்ரே வெளிப்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)


# கண்ணீர் அஞ்சலி

## அமரர் இராசம்மா முருகேசு



(1738)

பாசத்தின் உறைவிடமாய்
பண்பிலே பார்போற்ற வாழ்ந்தீர்கள்
அம்மாவுக்கு நிகரான அன்னையே!
அனைவரும் பார்த்திருக்க பார்விட்டகன்றீரே!

அமரர் இராசம்மா மாமி அவர்களின் இழப்பினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

N.S.K
No.60 Old Moor Street, Colombo-12
சிறிபேப்பர் மாட்
(பஸ்நிலையம் முன்)
308 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி சிறிஸ்கந்தராசா
குடும்பத்தினர்
நியூ சிறி கண்ணன்ஸ்ரோர்ஸ்,
திருநெல்வேலி.


# சட்ட விரோத கருக்கலைப்பு யாழில் திடீர் அதிகரிப்பு!

## தெல்லி சுகாதார வைத்திய அதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சட்டவிரோத கருக்கலைப்பும் திருமணமாகாமல் கர்ப்பம் தரித்தலும் சடுதியாக அதிகரித்துச் காணப்படுவதால் உடனடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பா.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழு கூட்டம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றையதினம் நடைபெற்றது.

அதில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் சட்ட விரோத கருக்கலைப்பு அதிகரித்து காணப்படுகின்றது. இக் குற்றச் செயலுடன் தொடர்புபட்டவர்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் விரைவாக இடம்பெறுவதில்லை எனவே இச் செயல்கள் அதிகரித்துச் செல்கின்றன.

திருமணமாகாத கர்ப்பம் தரிக்கும் பெண்களின் அளவு தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதற்கு காரணமானவர்கள் தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் தொடர்ச்சியான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத காரணத்தால் குற்றவாளிகள் தப்பித்துச்கொள்ளும் நிலை ஏற்படுகிறது.

ஒரு குற்றத்தை புரிந்த நபர் தண்டிக்கப்படாததால் அவர் தொடர்ச்சியாக பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

இது பாரிய சமூக சீரழிவை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடாக இருக்கின்றது. இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே எமது சமூகத்தை கலாசார சீரழிவில் இருந்து பாதுகாக்கவும் எதிர்கால சந்ததியினரை கருத்தில் கொண்டு இந்த சட்ட விரோத செயல்கள்ளை உடனடியாக தடுத்து நிறுத்தி இக் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-9)



சர்வதேச விசாரணையை வலியுறுத்தி கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயம் வரை ஆரம்பமாகிய நடைபயணத்தை படத்தில் காணலாம்.

## பரீட்சையினை பிற்போடுதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த மனித வளமுகாமைத்துவ டிப்ளோமா முதலாம் அரையாண்டு இடைப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என அதன் இணைப்பாளர் பேராசிரியர் க.தேவராஜா அறிவித்துள்ளார் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (எ)

# படுகொலை குறித்து விக்கிரமபாகு கவலை

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் நடைபெற்ற படுகொலைகள் தொடர்பில் உரிய விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று விக்கிரமபாகு கருணாரத்ன வலியுறுத்தியுள்ளார்.

நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன கொழும்பில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார்.

அதில் அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் போது இலங்கையின் பல பாகங்களிலும் சிங்களவர்கள் மட்டுமன்றி, பெருமளவான தமிழர்களும் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றன. ஆனால் இவை குறித்து முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை.

தற்போதைக்கு மிகப் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ள பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் மரணம் தொடர்பாகவும் சரியான முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகத் தோன்றவில்லை.

எனவே மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற அனைத்துப் படுகொலைகள் தொடர்பிலும் உரிய முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று விக்கிரமபாகு கருணாரத்ன வலியுறுத்தியுள்ளார். (எ-11)

# எம்.பி பதவி கோரி வழக்கு

(கொழும்பு)

உலக வரலாற்றில் முதல் தடவையாக தன்னை நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்குமாறு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ள சம்பவம் இலங்கையில் நடைபெற்றுள்ளது.

இந்த அரிய செயலை மேற்கொண்டிருப்பவர் தினேஷ் குணவர்த்தனவின் மஹஜன எக்சத் பெரமுன கட்சியின் துணைத் தலைவர் சோமவீர சந்திரசிறி ஆவார்.

உச்சநீதிமன்றத்தில் மனுவொன்றை நேற்று தாக்கல் செய்துள்ள அவர்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நியமனத்தை ரத்துச் செய்யுமாறும், தேசியப் பட்டியல் ஊடாக தன்னை நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் செய்யுமாறும் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வழக்கின் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணையாளர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் பொதுச் செயலாளர் சுசில் பிரேம்ஜயந்த மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் மூலம் தெரிவான 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொள்வதா இல்லையா என்பது குறித்து நீதிமன்றம் எதுவித தீர்மானத்தையும் நேற்று மாலை வரை அறிவிக்கவில்லை. (எ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை...

செப்டம்பர் 2009 இல் இராஜாங்க திணைக்களத்தில் இணைந்துகொண்ட காலப்பகுதியிலிருந்து இலங்கை விவகாரத்தில் நான் ஆழ்ந்த அக் கறையை கொண்டிருந்தேன்.

யுத்தத்தின் இறுதி தருணங்களில் இரு தரப்பும் இழைத்திருக்க கூடிய யுத்த குற்றங்கள் குறித்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறு எனக்கு ஆணைவழங்கப்பட்டிருந்தது.

2009 ஒக்டோபர் நடுப்பகுதியில் நான் இடைக்கால அறிக்கையொன்றை சமர்ப்பித்ததுடன், அதன் பின்னர் செனட் விடுத்த வேண்டுகோளின் பேரில் சில அறிக்கைகளை சமர்ப்பித்தேன், இலங்கை அதிகாரிகள் நேர்மையான விசாரணைகளை முன்னெடுக்க தவறியுள்ளனர் என நான் குறிப்பிட்டிருந்தேன்.

உள்நாட்டு நடைமுறைகளுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக நான் இருதடவைகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டேன். 2014 ஜனவரியில் நான் மீண்டும் விஜயம் மேற்கொண்டவேளை எனது விஜயத்திற்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. கொழும்பில் உள்ள அமெரிக்க தூதர கத்திற்கு அருகில் நூற்றுக்கணக் கானவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எனது முகத்தை பிசாசின் முகத்தை போல சித்தரிக்கும் பாரிய சுவரொட்டிகளை காணமுடிந்தது. நான் உலக சமாதானத்திற்கு ஆபத்தானவன் என தெரிவிக்கும் வாசகங்கள் அதில் காணப்பட்டன. அவர்கள் நான் யாழ்ப்பாணத்தில் இருந்த வேளை கொழும்பில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர், நான் கொழும்புக்கு வந்தவேளை அனைத்தும் அமைதியாக காணப்பட்டது.

இலங்கை விவகாரத்தில் நான் அமெரிக்காவில் உள்ள சகாக்களுடன் இணைந்து தீவிரமாக பாடுபட்டேன்.

ஜெனிவாவிற்கு இரு பிரேரணைகளை கொண்டுவந்தோம் மனித உரிமை ஆணையாளரின் விசாரணையை கோரும பிரேரணையை வெற்றிகரமாக நிறைவேற்றி னோம், குறிப்பிட்ட விசாரணை அறிக்கை அடுத்த சில வாரங்களில் வெளியாகலாம்.

மனித உரிமை ஆணையாளர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வார் என நான் எதிர்பார்க்கின்றேன்.

பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளுக்காக உறுதியாக நிற்க வேண்டும் என்ற எமது தீர்மானத்திற்கு வெற்றி கிடைத்த ஒரு சந்தர்ப்பமாக இதனை நான்காண கிறேன்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது, பொதுமக்களிற்கு எதிராக பாரிய குறச்செயல்களில் ஈடுபட்ட அமைப்பிற்கு எதிராக வலுவான படைபலம் அவசியமானது என நாங்கள் கருதுகின்றோம்.

அதேவேளை அத்தகைய செயற்பாடுகள் யுத்தங்களிற்கான சட்டங்களை கருத்திலெடுப்பவையாக அமைந்திருக்க வேண்டும், யுத்தம் குறித்த சட்டங்கள் பின்பற்றப்படுதல் என்பதை அடிப்படையாக வைத்து அவற்றைநோக்கவேண்டும்.

மோதலுடன் எவ்வகையிலும் தொடர்புபடாத மக்கள் வேண்டுமென்றே இலக்கு வைக்கபட்டது, மற்றும் சரணடைந்தவர்கள் படுகொலை செய்யப்பட்டது குறித்து நாங்கள் குறிப்பாக ஆழந்த கவலைகொண்டுள்ளோம். எனது அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் இவை குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பொறுப்புக்கூறுதல், உண்மையை ஏற்படுத்துதல், இவற்றிற்கு அதிகளவிற்கு காரணமான தனிநபர்களை விசாரணை செய்தல், குற்றங்கள் தனிநபர்களாலேயே இழைக்கப்பட்டன. சமூகங்களால் இல்லை என்ற அடிப்படையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் போன்ற இலங்கையர்களின் சொந்த தேவைகளிற்கு பதிலளிப்பவையாக இந்த யோசனைகள் அமைந்திருக்கவேண்டும். (எ-11)

# சர்வதேச விசா...

மன்ற உறுப்பினர் சிறீதரன், முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் அரசியல்வாதிகள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர். (எ-11)

# சம்பந்தனின்...

கப்பட்டு, அதற்கான உறுப்பினர்கள் தற்போது நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

இலங்கை அரசியலமைப்பின்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஆகியோர் இந்த அரசியலமைப்பு சபையின் உறுப்பினர்களாகியுள்ளனர்.

இந்நிலையில், அரசியலமைப்புச் சபைக்கான தமது பிரதிநிதியாக அமைச்சர் சம்பிக்க ரணவக்கவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ள அதேவேளை, தமது பிரதிநிதியாக அமைச்சர் விஜேதாச ராஜபக்சவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.


அதேவேளை, சிறுகட்சிகளின் சார்பாக ஜேவிபி தமது பிரதிநிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தை அறிவித்துள்ளது. (எ-11)


A/L க்குப் பின்னர் என்ன கற்பதாக இருந்தாலும் ஒரு தொழிலைப் பெற்றுக்கொள்வதே மிக அவசியம்!
6 மாதங்களில்
உள்நாட்டில் ஒரு தொழில்வாய்ப்பு
அல்லது
வெளிநாட்டு விசா உத்தரவாதத்துடன்
சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில் மாதம் 3 இலட்சம் வரையில் சம்பாதிக்கக்கூடிய
Business & Hotel Management With ENGLISH
(From Beginner's Level to IELTS)
கற்கைநெறிக் காலத்திலேயே மாதம் 15,000/= வரை சம்பாதிக்கலாம்
SIKARAM Any Visa to Any Country
வகுப்புக்கள் திங்கள், புதன், வெள்ளி 9.00 AM - 1.00 PM
அனுமதிகளுக்கு - 077 36 16 798
Sikaram Institute of Hospitality & English
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m

Personal Class-கணினி
*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker, Adobe Illustrator CC, Adobe Indesign CC)
*சிறுவர்களிற்கான கற்கைநெறி
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்
TP:0779672038 ஆசிரியர்: KRC

காணி விற்பனைக்கு
D4 மருதநகர் நாலாம் வாய்க்கால் கரடிப்போக்கு (ஈஸ்வரன் தியட்டர்) ஒழுங்கையில் நான்கு (4) ஏக்கர், 3 றூட், 1 பேச் பகுதிகளாக பிரித்து விற்கப்படும்.
★ ஒரு பரப்பு இரண்டு லட்சம் (C-2099)
தொடர்புகளுக்கு :- 0766253024

உயர்தரப் பரீட்சை முடித்தவரா நீங்கள்
CCTV
துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு
CCTV, Network Cabling
Copper Cabling & Wireless
100% தொழில் சார் செயன்முறை பயிற்சி நெறி


*Real Equipments இனால் பயிற்சி வழங்கப்படும்
*அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்
(C-2106) Next Batch : 12-Sep-2015
iCS Study Overseas 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம் 021- 4926222, 076-7013060






"SPOKEN ENGLISH" (120hrs)
அனுபவம் மிக்க நவீன கற்பித்தல் முறை மற்றும் உத்திகளுடன்,
உங்கள் வெற்றி நிச்சயம்
ஆரம்பம்
Batch 1 12.09.2015 @ 9.00 am
Batch 2 14.09.2015 @ 9.00 am
"The only place you can't miss"
VeRni ENGLISH ACADEMY Temple Road, Nallur.
R.Manochkumar 077 8085 423
(கைலாசபிள்ளையார் கோவில் முன்னால்)
(1736)

FALC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH IN NORTH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.
(C-2007)
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 985 மாணவர்கள் French கற்றுள்ளனர்.....
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி. ஆரிய குளத்துக்கு அண்மையில் ஆரம்பம் : 12.09.15 சனி 8 மணிக்கு
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 12.09 @ 4pm.
கண்டி வீதி, சாவகச்சேரி. ஆரம்பம்: 16.09 @ 4pm
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

மலிவு விலையில் அண்ணா உற்பத்திப் பொதிகள்
நல்லூர் உற்சவ காலத்தில் நல்லூர் பருத்தித்துறை வீதியில் உள்ள எமது விற்பனை நிலையத்தில் (சிவன் கோயில் பின்புறம்) அண்ணா உற்பத்திப் பொருட்கள் அடங்கிய பொதிகளை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
அண்ணா தொழிலகம் இணுவில்
(C-2100)

Diploma in Computerized Accounting Package
வர்த்தகத்துறை மாணவர்களுக்கான
இலவச கருத்தரங்கு
After A/L
⇒ Tally
⇒ Quick book
⇒ ACC Pack
⇒ M.Y.O.B







இது மாத்திரமல்லாது Microsoft excel இல் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 100 Functions கற்பிக்கப்படும்
வர்த்தக துறையினர் சகலருக்கும் மிக முக்கியமான Functions இதுவாகும்.
தேவை என்ற ஒன்று இல்லை என்றால் ஏன் Microsoft excel இல் 400 கும் அதிக Functions உள்ளது?
இக் கேள்விக்குரிய விடையினை எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் இலவசமாக இடம்பெறும் 1 மணித்தியால கருத்தரங்கில் பங்கு கொள்வதன் மூலம் அறிய முடியும்.
(1737)
தொடர்புகளுக்கு
Student Success Centre, 320, main Street, Jaffna
077 00 800 75 / 021 492 6655

Student Visa, Sponsor Visa, Work Permit & Embassy Interview
மற்றும் உள்நாட்டில் தொழில் தேடுவோருக்கான
விசேட ஆங்கிலக் கற்கைநெறி
அடிப்படையிலிருந்து ஆங்கிலத்தில் அச்சமின்றிப் பேசக் கற்றுக்கொள்ள
ENGLISH for Beginners
அன்றாட ஆங்கில மொழித் தொடர்பாடலுக்கு அவசியமான ஆங்கிலச் சொற்களஞ்சிய விருத்தியுடன், அடிப்படை இலக்கண வழுவற்ற பேச்சுப் பயிற்சி
இலக்கண நுணுக்கங்களுடன் சரளமாக பேச, எழுதக் கற்றுக்கொள்ள
ENGLISH for Advance Learners
ஆங்கில இலக்கணத்தை விரிவாகக் கற்றுக்கொண்டு, இலக்கணச் சுத்தமாக ஆங்கிலத்தில் பேசும், எழுதும் திறன்களை விருத்திசெய்துகொள்ள
IELTS பரீட்சையில் அதியுச்ச புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள
Rapid IELTS Preparatory Course
IELTS பரீட்சைக்கு அவசியமான Listening, Speaking, Reading, Writing Skills இல் உயர்ந்தபட்ச தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளும் வகையிலான நவீன அணுகுமுறை
அகன்ற திரையில் Multimedia Projector & Stereo Speakers மூலமான ஒலி, ஒளி விளக்கங்கள்
விரிவான கற்கைநெறி விளக்கங்களுடனான Course Modules
முற்றிலும் குளிரூட்டப்பட்ட வகுப்பறை
விசேட விரிவுரை கதிரைகள்
Tel: 0777 32 4004, 021 222 00 11
SIKARAM Any Visa to Any Country
#275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். வைத்தியசாலை பின்புறம் -
வைத்தியசாலை பின்புறம்-பஸ் நிலையத்தில் இருந்து 100m


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org